தமிழ்ப் பொழில்

தமிழாராய்ச்சித் திங்களிதழ்

கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீடு

துணர் : 64 மலர் 4

தமிழ்ப் பொழில்

கரந்தைத் தமிழ்ச்சங்கத் திங்கள் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு — 2021

துணர் : 64 பிரமோதூத — ஆடி மலர் : 4

ஜூலை — ஆகஸ்ட் — 1990

உள்ளுறை பக்கம்

1. கனியன் பூங்குன்றனார் ஆசீவகரா? ... 146
பேராசிரியர், ஆ. சிவலிங்கனார்

2. மொழி பெயர்ப்பில் 'கற்பு' 151
செ. இராஜேஸ்வரி

3. உயிர்களின் பிறப்பு - ஓர் ஒப்பாய்வு 160
ச. அ. இரெ. பரதராஜ்

4. பழந்தமிழர் வழிபாடு 166
புலவர் க. மா. வீரணன், எம். ஏ. பி. லிட்.,

5. மதிப்புரை 173
அரங்க. சுப்பையா, எம். ஏ. எம். எட்., எம். பில்.

6. பிரபஞ்சன் சிறுகதைகள் 176
டாக்டர். இரா. சண்முகவேலன், எம். ஏ., பி. டி., எம்.பில்., பிஎச். டி.,

7. ஓசை ஒலியெலாம் 185
பேராசிரியர் வி. அ. இளவழகன், எம். எஃசி, எம். ஃபில்,

8. திருவிடைமருதூர்க் கலம்பகம் ஓர் ஆய்வு 187
(சென்ற இதழ் தொடர்ச்சி)
இரா. சுந்தரமூர்த்தி, எம். ஏ., எம்ஃபில்.,

பதிப்பாசிரியர்: பேராசிரியர் ச. பாலசுந்தரம்

தமிழ்ப்பொழில் ஆசிரியர் குழு

திரு. ச. இராமநாதன்,
தலைவர். கரந்தைத் தமிழ்ச்சங்கம்.

,, த. கோ. ப. கோவிந்தசாமி, பி. காம்.,
செயலாளர், கரந்தைத் தமிழ்ச்சங்கம்.

,, கலைமாச்செல்வர் எஸ்.டி.காசிராஜன் ஐ. ஏ. எஸ்.,
முன்னாள் செயலாளர், தமிழ்வளர்ச்சிப் பண்பாட்டுத்துறை,
சென்னை.

,, சிலம்பொலி சு. செல்லப்பன், எம்.ஏ., பி.டி.,பி.எல்.,பிஎச்.டி
இயக்குநர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் சென்னை.

,, முனைவர்சி.பாலசுப்பிரமணியன், எம் ஏ. எம்.லிட், பிஎச்.டி
துணை வேந்தர்,
தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சை.

,, முனைவர் தமிழண்ணல், எம். ஏ., பி. எச்டி.,
முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர்,
மதுரைக் காமராசர் பல்கலைக் கழகம்.

,, முனைவர் மு. கோவிந்தராஜன்
பேராசிரியர், தமிழ்நாடு கல்வி ஆராய்ச்சி மற்றும்
பயிற்சி நிறுவனம், சென்னை.

,, முனைவர் சோ. ந. கந்தசாமி, எம்.ஏ., எம்.லிட்., பி.எச்.டி
இலக்கியத்துறைத் தலைவர், தமிழ்ப் பல்கலைக் கழகம்.

,, முனைவர் மா. இராமலிங்கம், எம். ஏ., பி எச். டி.,
தமிழ்த்துறைத் தலைவர், பாரதிதாசன் பல்கலைக் கழகம்

,, தமிழ்த்தொண்டர் கோ.முத்துப்பிள்ளை, பி ஏ.,
முன்னாள் அரசு துணைச் செயலாளர் சென்னை.

,, முனைவர் ஈரோடு தமிழன்பன், எம். ஏ., பி எச்.டி.,
தமிழ்முதுகலைத்துறை, புதுக்கல்லூரி,சென்னை.

,, பேராசிரியர் பி. விருத்தாசலம், எம் ஏ.,
முதல்வர், தமிழவேள் உமாமகேசுவரனார்
கரந்தைக் கலைக்கல்லூரி.

,, புலவர். செ. இராசு எம். ஏ,
இணைப்பேராசிரியர்,கல்வெட்டுத்துறை,
தமிழ்ப்பல்கலைக் கழகம், தஞ்சை.

,, புலவர் ஆ. பாலன், எம்.ஏ., எம். ஃபில்
துணைமுதல்வர்.த. உ. கரந்தைக் கலைக்கல்லூரி

,, புலவர் மீனா. இராமதாசு, எம். ஏ., பி. எட்.,
தலைமைத் தமிழாசிரியர், உமாமகேசுவர மேனிலைப்பள்ளி

,, முனைவர் பா. மதிவாணன், எம் ஏ., எம் ஃபில்., பிஎச்.டி.,
தமிழ் விரிவுரையாளர், த. உ. கரந்தைக் கலைக் கல்லூரி,

கணியன் பூங்குன்றனார் ஆசீவகரா ?

பேராசிரியர், ஆ. சிவலிங்கனார்,
மயிலம்

யாதும் ஊரே; யாவரும் கேளிர் ;
தீதும் நன்றும் பிறர்தர வாரா;
நோதலும் தணிதலும் அவற்றோர் அன்ன;
சாதலும் புதுவது அன்றே; வாழ்தல்
இனிதுஎன மகிழ்ந்தன்றும் இலமே; முனிவின்
இன்னாது என்றலும் இலமே; மின்னொடு
வானம் தண்துளி தலைஇ ஆனாது
கல்பொருது இரங்கும் மல்லற் பேரியாற்று
நீர்வழிப் படூஉம் புணைபோல் ஆருயிர்
முறைவழிப் படூஉம் என்பது திறவோர்
காட்சியில் தெளிந்தனம் ; ஆகலின் மாட்சியிற்
பெரியோரை வியத்தலும் இலமே;
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே. (புறம்-192)

என்பது கணியன் பூங்குன்றனாரின் பாட்டு.

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்பது அவரது கோட்பாடு. அதற்கு அவர் கூறும் காரணங்களாவன :- "ஒருவர்க்குத் தீமையும் நன்மையும் பிறரால் தரப்படுவன அல்ல; துன்பமும் துன்பநீக்கமும் இன்பமும் இன்பப்பெருக்கும் பிறர்தர வருவனவல்ல; சாவும் பிறப்பும் புதியனவல்ல; வளமுடன் வாழும் வாழ்க்கை இனிது என மகிழமாட்டோம்; வளமின்றி வாழும் வாழ்க்கை வெறுப்பு காரணமாகக் கொடியது என்று நினைய மாட்டோம். பெருமழை காரணமாக ஓடும் பேர்யாற்று நீர்வழித் தெப்பம் போவதுபோல முறைவழி உயிர்கள் இயங்கும் என்பதை அறிவுடையார் நூல்வழி அறிந்தோம். அதனால் பெரியோரை வியந்து போற்றுவதும் சிறியோரை இகழ்வதும் செய்யமாட்டோம், இவையேயாம்.

•

இக்கூறப்பட்ட செய்திகள் யாவும் எல்லாச்சமயத்தவர்க்கும் உரியனவே; உடன்பாடானவையே. இப்பாடலில் உள்ள 'முறைவழி' என்பதற்கு யாவரும், 'ஊழ்வினைவழி'யென்றே பொருள்கொள்வர். ஊழ்வினை என்பது, உயிர்கள் முன்பிறவியிற் செய்த நல்வினை தீவினைகளைக் குறிப்பதாம். அவ்வினையின்

வழியே இப்பிறவியில் உயிர்கள் செல்லும் என்பதுவே எச்சமயத்தாரும் சொல்வது. ஆதலின் இப்பாடல் சமயப் பொது நோக்குடையது என்பது புலப்படும்.

" தமிழகத்தில் ஆசீவகர்கள் " என்னும் ஆய்வுநூலில், கணியன் பூங்குன்றனாரின் மேற்பாடலில் ஆசீவகக் கோட்பாடுகள் இருப்பதாகக் கூறுவர் டாக்டர் ர. விசயலட்சுமி அவர்கள்.* ' முறைவழி ' என்பதுக்கு, மற்றைச் சமயத்தார் கூறுவதுபோல, ' முற்பிறப்பின் ' நல்வினை தீவினைவழி ' எனக் கூறாது, ' நியதிவழி ' என்பது பொருளாகக் கூறுவர். ' நியதி ' என்பது உயிர்கள் கருவில் இருக்கும்போதே காரணகாரியத் தொடர்பின்றி அமைந்து கிடக்கும் அமைப்புகளாகும். அந்நியதிப் படியே உயிர்கள் உலகில் இயங்கும். இப்படி ஆசீவகர் கூறுவர். இப்பொருளே ' ஆருயிர் முறை வழிப்படும் ' என்பதற்குப் பொருந்தும். மற்றைய சமயத்தார் கூறும் ' ஊழ்வினைவழி ' என்னும் பொருள் சிறவாது என்பது அவர்கள் கருத்து.

வெளிப்படையாகப் பார்க்கும்போது சமயப்பொது நோக்குடையது அப்பாடல் என்னலாம். ஆயினும், ஊன்றிப் பார்க்கின் ஆசீவக நோக்குடையதே என்று கருதலாம் படியுள்ளது.

உயிர்கள் தீதும் நன்றும், நோதலும் தணிதலும், சாதலும் பிறத்தலும் அடைவதற்குக் காரணம், அவை முற்பிறவியிற் செய்த ஊழ்வினைகளே என்பது மற்றைச் சமயத்தாரின் கொள்கை. ஆசீவகரோ ஊழ்வினை என்பது ஒன்றில்லை. உயிர்கள் கருவிற்படும் போதே தீதும் நன்றும், நோதலும் தணிதலும், சாதலும் பிறத்தலும் உடையவாதல் நியமிக்கப்படும்; அந்நியதிவழியே உயிர்கள் இயங்கும் என்பர்.

பெறுதலும் இழத்தலும் இடையூறு உறுதலும்
உறுமிடத் தெய்தலும் துக்கசுகம் உறுதலும்
பெரிதவை நீங்கலும் பிறத்தலும் சாதலும்
கருவிற்பட்ட பொழுதே கலக்கும்.

(மணிமேகலை-27 : 159-162)

என்பது ஆசீவகன் கூற்றாக மணிமேகலை நூல் கூறுவது. நியதிவழியே உயிர்கள் இயங்கும் என்பது ஆசீவகர்

---

* தமிழகத்தில் ஆசீவகர்கள் [பக்கம் 4,5.] டாக்டர் ர. விசயலட்சுமி, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை 600113. (1988).

கொள்கையேயன்றி நியதிகாரணமாக உயிர்களின் காரியங்கள் நிகழும் என்பது கொள்கையன்று. ஏனெனின் ஒருநிகழ்ச்சிக்குக் காரணம் என்பது ஒன்றில்லை என்பதும் ஆசீவகர் கோட்பாடு. இதனைத் தம் ஆய்வு நூலில் நன்கு விளக்கிய டாக்டர் ர. விசயலட்சுமி அவர்கள், 'கணியன் பூங்குன்றனாரின் பாடலில் ஆசீவகர் கோட்பாடே அமைந்துள்ளது என்னும் கருத்தினர் என்பதற்கு யான் காணும் காரணங்கள் இனி விளக்கப்படும்.

"பெரியோரை வியத்தலும் இலமே
சிறியோரை யிகழ்தல் அதனினும் இலமே"

என்னும் வரிகளே நியதிக் கோட்பாட்டுக்குத் துணை செய்வனவாம்.

பெரியாரை வியந்து அவர் வழியொழுகுதல் வேண்டும் என்பதும், சிறியாரையிகழ்ந்து அவரை விட்டு விலகல் வேண்டும் என்பதும் மற்றைச் சமயத்தார் கொள்கை. பெரியாரைத் துணைக்கொள், சிற்றினம் சேரேல் என்பன அவர்கள் ஆணை. பெரியோரை வியப்பதும் சிறியோரை இகழ்ந்து நீங்குவதும் நல்வினைகளாகவே கருதுவர். 'அவற்றால் விளைவன நல்லனவாக அமைய, அந்நல்லனவற்றால் இப்பிறவியிலும் வருகின்ற பிறவியிலும் நல்லனவே விளையும்' என்பதும் 'சிறியோரைச் சேரின் தீயனவே செய்ய நேரும்; அவற்றால் இப்பிறவியிலும் வருகின்ற பிறவிகளிலும் தமக்குத் தீயனவே விளையும்' என்பதும் அவர்கள் கருத்தாம். அதனால் பெரியோரை வியப்பதும் சிறியோரையிகழ்வதும் தேவை என்பர் அவர்கள்.

இனிச் 'சிறியோரை யிகழ்தல்' என்பதற்குச் 'சிறியோரை மதியாது விட்டு விலகுதல்' எனப்பொருள் கொள்ளாமல், 'இகழ்ந்து பேசுதல்' எனப்பொருள் கொள்வதும் உண்டு. அவ்வாறாயின் சிறியோரை யிகழ்ந்து பேசின் அவர்களின் பகை வருவதோடு பாவமும் வரும். ஆதலின், சிறியோரை இகழ்தல் கூடாது என்றும் கொள்ளலாம்.

எப்படியாயினும் பெரியோரை வியத்தலால் நன்மைவிளையின் அது தேவைதானே? பூங்குன்றனார் ஏன் 'வியத்தல் இலம்' என்றார்?

"பெரியோரை வியப்பதாலும் சிறியோரை இகழ்வதாலும் நல்வினை தீவினை என்பன உளவாக; அதனால் இன்ப

துன்பங்களுக்கு அவை காரணமாகா என்பது" கணியன் பூங்குன்றனாரின் கோட்பாடாக இருத்தல் வேண்டும். ஊழ் வினைக் கொள்கை அவர்க்கு இல்லாமையால் பெரியோரை வியப்பதால் நன்மையோ சிறியோரை இகழ்வதால் தீமையோ விளையா என்பதும் அவர் கோட்பாடாம். அதனால்தான் யாதும் ஊரே என்றவர், நல்லோர் தீயோர் யாவாராயினும் தமக்குக் கேளிரே என்றார்.

பூங்குன்றனார் தாம் நியதிக் கோட்பாட்டை மேற் கொண்டதற்குக் காரணம், 'திறவோர் காட்சியில் தெளிந்ததே' என்றார்.

திறவோராவார் நன்மை தீமைத் திறங்களையறிந்த மேலோர். அவர் தம் காட்சி என்றது, அவர் தம் அனுபவ அறிவால் கூறிய நூல்களையாம். அந்நூல்களையறிந்து தெளிந்ததே பெரியோரை வியவாமைக்கும் சிறியோரை இகழாமைக்கும் காரணம் என்றார்.

அந்நூல்கள் யாவை ? இக்காலத்து அவை கிடைக்கப் பெற வில்லை. எம்மொழியிலும் இல்லை.

அந்நூல்கள் வான நூல்கள், (சோதிட நூல்கள்) என்பது என் கருத்து. கோள்களின் அமைப்புப்படி மக்களின் வாழ்வு செல்வதை உணர்ந்தவர் பூங்குன்றனார். அவரை வாளா பூங்குன்றனார் என்னாது, 'கணியன் பூங்குன்றனார்' என்பதால் அவர் சோதிடப் புலவர் என்பது பெறப்படும். ஒருயிர் பிறக்கும் போது கோள்களின் அமைப்பு எப்படியுளதோ அப்படியே அதன் வாழ்வு அமையும் என்பதை அவர் அறிந்தவராதலின் 'பெரியோரை வியத்தலும் சிறியோரை இகழ்தலும் இலம்' என்றார். பெரியோர் சிறியோர் ஆனதே கோள்கள் அமைந்த-கருவிலேயே அமைந்த நியதி வழியின்றி அவரவர் செயல்களின் காரணவழியன்று.

'பெரியோரை வியத்தலும் இலம்' என்றது போலவே 'சிறியோரை இகழ்தலும் இலம்' என்னாமல், 'அதனினும் இலம்' என்றது ஏன்? பெரியோரை வியந்தால் அதனால் பெரியோராதலின் அதுகேட்டு மகிழ்மாட்டார்கள். ஆனால் சிறியோரை இகழ்ந்தால் அதுகேட்டுச் சிறியோராதலின்

வருந்துவர். அவ்வருத்தமும் தம்மால் அவர்கட்கு வரலாகாது என்பதற்காக 'வியத்தலினும் இகழ்தல் இலம்' என்றார் அவ்வளவே.

இனி ஆருயிர் முறைவழிப்படும் என்பதற்குத் தரப்பட்ட உவமையைக் காணினும் ஆசீவகக் கோட்பாடு புலப்படும் தெப்பம் பேர்யாற்று நீர்வழிச் செல்கிறது. செலவு நீருடையது, தெப்பத்தினுடையதில்லை. தெப்பம் செல்வதற்கு நீர்ச்செலவு காரணம் இல்லை. நீர்மேல் தெப்பம் இருந்து, நீர் செல்லும் போது, தானும் செல்வதாக அமைகிறது. பேருந்தில் செல்லும் போது நாம் செல்லவில்லையென்றாலும் பேருந்து செல்ல நாமும் சென்றது போல்வதே நீர்வழித் தெப்பம் செல்வதும். செல்வது நீர், தெப்பம் செல்வதாகக் கூறப்படுவது இடத்து நிகழ் தொழில் இடத்துப் பொருள்மேல் ஏற்றிய இலக்கணையாம். அதுபோல நியதியே யாவும் நிகழ்த்துவது. அதன்கண்பட்ட உயிர்நிகழ்த்துவதுபோல் பேசப்படும். உயிர் கருவிற்பட்டபோதே அமைந்த நியதிச் செலவின் வழி உயிர்செல்லும்; அவ்வளவே.

இதுகாறும் கூறியவற்றால், "தமிழகத்தில் ஆசீவர்கள்" என்னும் நூலுடையார் கருத்தின்படி, 'யாதும் ஊரே' என்னும் ஆசீவகரின் நியதிக் கோட்பாடே பொதிந்திருந்தலால் கணியன் பூங்குன்றனார் ஓர் ஆசீவகர் என்பது பெறப்படும்.

மொழி பெயர்ப்பில் ‘கற்பு’
(Is it chastity or wedded faith ?)

செ. இராஜேஸ்வரி,
ஆய்வாளர்,
தமிழியல் துறை,
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்.

முன்னுரை :

பண்பாடும் மொழியும் ஒன்றிலொன்று இணைந்துள்ளன பண்பாடு சாராத மொழியும் இல்லை. மொழி சாராத பண்பாடும் இல்லை. அங்ஙனம் ஒரே சமூக உண்மையைப் புலப்படுத்தும் இரண்டு மொழிகள் உலகில் இல்லை. ஒவ்வொரு மொழியும் தனித்தன்மையுடன், மற்றவற்றிலிருந்து வேறுபட்டு விளங்கு கிறது. ஒவ்வொரு சமூகமும் தமக்குள் வேறுபட்டுத் தனித் தன்மை பெற்றுத் திகழ்கின்றது. இந்நிலையில் ஒரு மொழியில் சொல்லப்படும் சமூகச் செய்தி ஒன்றினை அம்மொழி பேசுவோர் புரிந்து கொள்வதுபோல அதனை வேறொரு மொழியில் சொல்லி அவ்வேற்று மொழியினரைப் புரிந்துகொள்ள வைப்பது சிக்கலான பணியாகும். சான்றாக, ஊசியிலைக்காட்டுப் பகுதிகளில் வாழும் மனிதன் ‘மரம்’ என்று சொல்லும்போது பெறும் மன உணர்வை வெப்பநிலைக் காட்டுப் பகுதிகளில் (Tropical Forest) வாழும் மனிதன் பெறுவதில்லை. ஏனெனில் முதல் மனிதன் பார்வை யில் பிறந்தது முதல் பதிந்த மரத்தின் உருவம் நீண்டுயர்ந்த மரத்தின் உருவம், இரண்டாம் மனிதனின் பார்வையில் பதிந் திருப்பது அகன்று அடர்ந்த மரத்தின் உருவம்.

1. பண்பாட்டுச் சிக்கல் :

மொழிபெயர்ப்புச் சிக்கல்களை வகைப்படுத்திய அறிஞர் பெருமக்கள் அவற்றை,

1. மொழியியல் சிக்கல்,
2. பண்பாட்டுச் சிக்கல் (மொழியியல் அல்லாதன),
3. மறு படைப்புச் சிக்கல் (Re-creative)

என மூன்றாகப் பகுத்துள்ளனர். இவற்றுள் பண்பாட்டுச் சிக்கல் சொல்லின் சமுகச் செயற்பாட்டையும், சமூகப் பங்கினையும் புலப் படுத்துவதில் ஏற்படும் சிக்கலைக் குறிக்கிறது. பண்பாடு சமூகத்தின்—அதன் செயற்பாட்டின்-ஓர் அங்கமாகத்திகழ்கிறது. இதனை அச்சமூகம் சாராத பிறிதொரு சமூகத்தாருக்கு எடுத்துரைப்பது சிக்கலான பணியாகும். இப்பணியில்

சொல்லுக்குப் புறத்தே அல்லது சொல்லின் பின்னணியில் உள்ள அம்மொழி பேசும் மக்களின் பண்பாடு சார்ந்த கருத்துக்களை மொழிபெயர்ப்பாசிரியர் அறிந்திருக்க வேண்டும். அவ்வாறின்றி சொற்பொருளை — அதன் அகராதிப்பொருளை — மொழி பெயர்த்தால் மூலநூலாசிரியரின் செய்தியை முரண்படக் கூறிய குற்றத்திற்கு, நம்பகத்தன்மையற்ற நிலைக்கு ஆளாக நேரிடும்.

2. பண்பாட்டின் அயன்மை :

சொற்பொருள் அல்லது கருத்துப்பொருள் ஆள்வதனைத் தொல்காப்பியர் கூறும் 'பொருண்மை தெரிதலோடு' ஒப்பிடலாம். 'சொன்மை தெரிதலை' ச் சொற்பொருள் எனவும், 'பொருண்மை தெரிதலை' நுண்பொருள் எனவும் / கருத்துப் பொருள் எனவும் கூறலாம்.

பண்பாட்டுச் சிக்கல் கற்பு, பிறன்மனை நயவாமை, வாய்மை, அறம் போன்ற சமூக மதிப்புகள், நம்பிக்கைகள், வாழ்க்கை முறை, சிந்தனைப்போக்கு, பழக்கவழக்கங்கள், சடங்குகள் ஆகியவற்றை மொழிபெயர்ப்பதில் தோன்றுகிறது. முற்றிலும் வேறுபட்ட அயல் பண்பாடு பற்றிய செய்திகளை மொழிபெயர்ப்பில் படிக்கும்போது வேற்றுமொழியினர் தம்மால் உணர்தற்கரிய குழப்பமான அல்லது மருட்சியான மனக்காட்சி களைப் பெறுவர். இச்செய்திகளைத் தொடர்ந்து பெறுமொழி வாசகர் படிக்கும்போது ஆங்காங்கு புரிதலுணர்வு தடைபட்டு நூலின் ஓட்டத்தோடு இணையமுடியாமல் அவரை இச்செய்திகள் அயன்மைப்படுத்திவிடும். இதனால் பண்பாட்டுக் கூறுகளை மொழிபெயர்ப்பதில் ஆசிரியர்கள் மிகுந்த அக்கறையும் கவனமும் கொள்வர்.

3. மொழிபெயர்ப்பின் இடர்ப்பாடுகள் :

பண்பாட்டுச் சிக்கலைப்பற்றி நைடா பின்வருமாறு கூறுகிறார். "பண்பாட்டுக் கூறுகளை முறையாக மொழிபெயர்க்காவிட்டால் அம்மொழி பெயர்ப்பைப் படிப்போர் அச்செய்திகளைத் தவறாகப் புரிந்துகொள்வர். மொழிபெயர்ப்பு பொருளற்ற செய்தியாகத் தோற்றமளிக்கும்". பண்பாட்டுச் செய்திகளை விளக்கமாகக் கூறுவதனால் சராசரி வாசகருக்குச் 'செய்திப் பெருக்கம்' (over load) காரணமாக படிப்பின் ஓட்டத்தில் இடையூறு ஏற்படும். பொருள்விளங்காத, மாறுபட்ட பண்பாட்டுச் செயற்பாடுகளுக்குத் தீர்வு ஒன்றையும், நைடா வழங்கியுள்ளார். விளக்கக் குறிப்பு தருவதனால் பண்பாட்டுக் கூறுகளைப்

பெறுமொழி வாசகருக்கு முறையாகப் புலப்படுத்த இயலும். சிறப்பான வரலாற்றுச் சூழல்களோடு தொடர்புடைய பண்பாட்டுச் செய்தியை அதே பக்கத்திலும், பொதுவான பண்பாட்டு விளக்கங்களைப் பிற்சேர்க்கையிலும் தரவேண்டும் என்று நைடா கூறியுள்ளார்.

4. இலக்கியம் காட்டும் ' கற்பு ' :

' கற்பு ' என்ற பண்பாட்டுக்கூறு பண்டைக் காலத்தில் திருமணத்திற்குப் பிறகு உள்ள ஒழுக்கமாகத் தொல்காப்பியத்தில் (கற்பியல்) கூறப்பட்டுள்ளது. பரத்தையிற் சென்ற தலைவனோடு தலைவி ஊடநேர்ந்தாலும் பின்னர் ஏற்றுக் கொண்டதாகவே பாடல்கள் காட்டுகின்றன. தலைவனைக் கற்பிழந்தவன் எனக் குற்றஞ்சாட்டிய நிலை காணப்படவில்லை கலித்தொகை ' கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை' என விளக்குகிறது. இதற்கும் பிந்திய காலத்தைச் சேர்ந்த சிலப்பதிகாரம் கற்புடை மகளிரை உலகமே போற்றும் என்று அப்பண்பிற்குத் தெய்வீக மதிப்பினை அளித்துள்ளது. பிற்காலத்தில் தோன்றிய போது ' நிழல்படா கற்பு ' ' நெஞ்சு புகாக் கற்பு ' என்று கணவனைத் தவிரப் பிற ஆடவரின் நிழல் கூட ஒரு பெண்ணின்மீது விழக்கூடாது எனவும் பிறர் நெஞ்சில் இடம்பெறுவதால் கற்புத்திறம் குறைபடும் என்றும் கருதப்பட்டது இப்பின்னணியில் ஆராய்ந்தால் ' கற்பு பெண்களுக்கே உரிய பண்பு என்பதும் மணவாழ்விற்கு அடிப்படையானது என்பதும் பெறப்படும்.

5. கற்பு – அகராதி விளக்கம் :

தமிழ் மொழி அகராதி கற்பெனும் சொல்லுக்குப் பின்வரும் பொருள்களைத் தந்துள்ளது ; ஆங்கில மொழிபெயர்ப்புக்களையும் அளித்துள்ளது.

கற்பு : Conjugal fidelity, chastity

1. பதி விரதா தருமம்
2. களவுக் கூட்டத்துக்குப்பின் தலைவன் தலைவியை விதிப்படி மணந்து இல்லறம் புரியும் ஒழுக்கம் (நம்பி. 26)
3. முல்லை (An emblem of female chastity)
4. கல்வி (Learning, Study, Knowledge)
5. தியானம் (Meditation)
6. வேலைப்பாடு (Workmanship)

இவை தவிரத் தமிழ் - ஆங்கில அகராதியில் (J. P. Fabricius) கீழ்க்காணும் வேறு பொருள்களும் தரப்பட்டுள்ளன.

கற்பு : 1. Chastity, female virtue
2. Fitness, Prosperity (முறைமை)
3. Fortification (மதில்)

கற்புடைமை — Female chastity.

கற்பெனும் சொல் 'கல்' என்ற அடிச்சொல்லிலிருந்து தோன்றியது. கல் திண்மையானது என்பதனால் அதன்வழிப் பிறந்த கற்பிற்கும் 'கற்பெனும்' திண்மை' என்றும் 'திறம்பாமை' என்றும் விளக்கம் தரப்பட்டது. கற்பிக்கப் படுவது கற்பு என்றும் கூறுவர். தியானம் என்பது மனத்தை ஒருமுகப்படுத்தலாகும். மதில் என்பதும் பிறர் உட்புகா வண்ணம் கட்டப்பட்ட தடுப்புச்சுவர் ஆகும். 'சிறை காக்கும் காப்பு' என்ற வள்ளுவர் கூற்று இவண் நோக்கற்குரியது. எனவே அகராதி கூறும் பொருள்களெல்லாம் ஒரே கருத்தினை உடையன என்பதை அறியலாம்.

கற்பினை Female chastity, Female virtue என விளக்கி யிருப்பது அப்பண்பின் தனித்தன்மையைக் காட்டுகிறது.

6. பாரதி பாடிய 'கற்பு நிலை':

பாரதியார் கற்பெனும் இப்பண்பு ஆண், பெண் இருவருக்கும் பொதுவானதாக இருக்கவேண்டும் என்று பாடி யுள்ளார். மொழிபெயர்ப்பாசிரியர்கள் இப்பாடல் வரிகளை,

'They talked of **chastity,** Sisters
Chastity is good for both'

'And they talk **Wedded faith**
Good, let it be binding or both'

என்று மொழி பெயர்த்துள்ளனர் கற்பிற்கு 'Chastity' என்றும் 'Wedded faith' என்றும் இரண்டு வகை மொழிபெயர்ப்புக்கள் காணப்படுகின்றன.

'Chastity' என்ற சொல்லுக்குச் சமூகவியல் அடிப்படை யிலும் 'Faith' என்பதற்குச் சமய அடிப்படையிலும் பொருள் கூறப்படுகிறது. 'chaste' என்பதன் மூல வடிவம் 'castus' எனப்படும் இலத்தீன் சொல்லாகும். இலத்தீனில் 'தூய்மை' என்ற பொருளைக் குறித்தது. குறிப்பாக, தங்கள் இனத்திற்குத் தூயவர்களாய் இருத்தலைக் குறித்தது.

7. Chastity சொல்லும் பொருளும் :

'Chaste' என்ற சொல் 'Caste' (இனம், ஜாதி) என்ற சொல்லிலிருந்து தோன்றியது. இதன் மூல வடிவம் போர்த்துகீசிய மொழியைச் சேர்ந்த 'casta' என்பது - 'casta' என்றால் கலப்படமில்லாத, உறுதியான (Unmixed, Strictly) என்று பொருள். இலத்தீனில் வழங்கிய 'castus' என்ற சொல்லின் பெண்பால் வடிவம், casta'. இச்சொல் கடன்சொல்லாகப் போர்த்துகீசிய மொழியில் வழக்குப்பெற்றது. 'Castus' என்ற இலத்தீன் சொல் - சமயச்சடங்குகளிலும் விதிமுறைகளிலும் உறுதியாக இருத்தலைக் குறித்தது இன்றும் கந்தோலிக்கச் சமயத்தினர் 'சமயத்தூய்மை' (Religious Purity) என்ற பொருளில் இதனை வழங்கி வருகின்றனர்.

வரலாற்றுக்கு முந்திய காலத்தில் சமயச் சடங்குகளில் பங்கு பெறுவோர் ஒரு குடும்பத்தையோ, ஒருகுழுவையோ சேர்ந்தவராக இருந்தனர். இவர்களுக்குப் பொதுவான விதிமுறைகள் விதிக்கப்பட்டிருந்தன. எனவே, இச்குழுவினர் தம்குழுவிற்கு (சாதி, இனம் போன்றவற்றிற்கு) உண்மையாக இருப்பதனை 'castus' என்ற சொல் குறித்தது. இம்முறையில்தான் இச்சொல்லில் இருந்து 'caste' என்பதும் உருவாகியது.

சடங்குகளில் பங்குபெறும் உரிமை பெற்ற ஒரே குழு அல்லது இனத்தைச் சேர்ந்த மக்கள் மற்ற இனத்தவரோடு அவர்களின் சமயச்சடங்குகளில் கலந்துகொள்வதில்லை. இப்பழக்கத்தைத் 'தூய்மை' (Pure) 'உறுதியான' 'கலந்து விடாத' போன்ற அகராதிப்பொருள்கள் உணர்த்துகின்றன. பிற இனத்தவரோடு பாலியல் நெறியான உறவு கொள்வதனை அவர்கள் தடை செய்திருந்தனர். மண உறவு விலக்கப்பட்டிருந்தது. பிற இனத்தவரோடு பாலுறவு கொள்ளாமலிருப்பதை அறமாகக் (தமிழ் அகராதிகள் கூறுகின்ற பதிவிரதா தருமமாக) 'Virtuous, sexually chaste' கொண்டனர். இதனால் சமயத்தையும், பிற சமூகப் பழக்க வழக்கங்களையும் பாதுகாக்க முடியும் என்ற பண்டைய மக்கள் நம்பினர்.

'Chastity' என்ற சொல்லின் பொருள் வரலாறு, சமயச் சடங்குகளில் பங்கு கொள்கின்ற, சமய விதிமுறைகளுக்குட் பட்ட = ஒரேகுழு / இனத்தைச் சேர்ந்த (caste) = பிற இனத்தவரோடு தொடர்பு கொள்ளாத = குறிப்பாக பாலியல் தொடர்பற்ற = தனி மனித ஒழுக்கம் என்று - பொதுப்பண்பி

லிருந்து தனிப்பண்பாகப் பரிணமித்துள்ளது. கூட்டத்திற்கு உண்மையாக இருத்தல் அல்லது அதன் தூய்மையைக் காத்தல் எனும் பண்பு பின்னர் குடும்பத்தின் தூய்மையாக மாறியுள்ளது.

சமஸ்கிருதச் சொல்லான 'cistas' எனபதும் 'castus' என்ற சொல்லுடன் தொடர்புடையதாகும். சமஸ்கிருதத்தில் இச்சொல் நன்கு கற்பிக்கப்பட்ட நன்கு பயிற்சிபெற்ற என்ற பொருள்களில் வழங்குகிறது.

இலத்தீனில் வழங்கிய 'castus' பல வடிவங்களைப் பெற்றுள்ளது. போர்த்துக்கீசியத்தில் 'casta' என வழங்கப் பெற்றது. அதன் அண்டை நாடான ஸ்பெயினில் 'castitat' என வழங்கப்பெற்றது. ஸ்பெயினுக்கு அருகேயுள்ள பிரான்ஸ் நாட்டில் 'chastete' என்று வழங்கியது, பழைய பிரெஞ்சு (Old French) மொழியிலிருந்து பழைய ஆங்கிலத்திற்கு இச்சொல் மாறிச் சென்றது.

'castus' என்பதுடன் தொடர்புடைய 'castigare' என்ற இலத்தீன் வடிவம் 'துரத்து / விரட்டு' என்ற பொருளில் வழங்கியது. இச்சொல குழுவிற்கு / இனத்திற்கு உண்மையில்லாதவரைத் திருத்தும்பொருட்டு (to correct) தண்டனை (punish) அளிப்பதனைக் குறித்தது. பிரெஞ்சு மொழியில் castigare chastier (பழைய பிரெஞ்சு) chatier (புதிய பிரெஞ்சு) என்று வழங்கியது. புதிய ஆங்கிலத்தில் 'chastien' என்றும், பின்னர் 'chasten' என்றும் இடம்பெற்றது. ஆங்கிலத்தில் 'castigate' என்ற சொல் தண்டனை அளிப்பதனையும் கடுஞ்சொற்களால் ஏசுவதனையும் குறிக்கிறது. விதிகள் ஏற்படுத்தப்படும்போது விதிமீறல்களுக்கான தண்டனைகளும் உருவாகின்றன.

சடங்கு, குழு, கட்டுப்பாடு, தண்டனை என பல்வேறு பரிமாணங்களைப் பெற்ற 'castus' என்ற சொல் எதிர்மறைப் பொருளைத் தரும் பொருட்டு in- என்ற முன் ஒட்டைப்பெற்றது. இதனால் 'in cestus' என்ற சொல் உருவாகி, தூய்மையற்ற (impure) என்ற பொருளில் வழங்கியது. 'castus' என்பது (இனத்திற்கு) உண்மையான தூய்மையான என்ற பொருளிலும், 'Incestus' இனத்திற்கு ஒவ்வாத, தூய்மையற்ற என்ற பொருளிலும் வழங்கியது. இதன் அடிப்படையில் ஆங்கிலத்தில்

'incest' இனத்திற்கு ஒவ்வாத, இனத்திற்கு ஏற்றுக் கொள்ளாத' மண உறவுகளைக் குறித்தது. Chastity என்பது சமூகம் ஏற்றுக்கொண்ட பாலுறவையும் 'incest' சமூகம் விலக்கிய பாலுறவையும் குறித்து வருகிறது.

ஆக, ஆங்கிலச்சொல் பொதுப்பண்பினை விலக்கி, தனிப் பண்பாகக் கொண்டு வழங்கி வருகின்ற இக்காலத்தில் 'chastity' என்பது 'conjugal fidelity' என்பதனைத் தம் மையக் கருத்தாகக் கொண்டுள்ளது. மரபுத்தொடர்களில் இடம்பெறும்போது chaste என்பது தூய்மை என்ற பொருளினைக் கொண்டிருந்தாலும் தனிச் சொல்லாக வருமிடங் களில் பண்புச் சொல்லாக பாலுறவுத் தடையைக் குறித்து வருவது தெளிவு.

8. கற்பும் தூய்மையும்:

உயர்தனிச் செம்மொழியாகப் போற்றப்பட்ட கிரேக்கத்தில் 'கற்பு' எனும் பண்பினைக் குறித்த தனிச்சொல் எதுவும் இல்லை. Hagnos (ἁγνός Grk.) எனும் சொல் 'தூய்மை' என்ற பொருளில் வழங்கியது. இச்சொல் சூழலுக்கேற்பக் கற்பெனும் பண்பையும் குறித்துள்ளது. குறிப்பிட்ட சொல் வழக்கு இல்லை என்பது அப்பண்பாடும் அந்நாட்டில் இல்லை என்பதையே விளக்குகிறது.

9. மரபுத்தொடர்கள்:

மணவாழ்க்கைக்குரிய சட்டமாகக் 'கற்பு' வரையறுக்கப் பட்டாலும் ஆங்கிலத் தொடர் வழக்கில் இச்சொல் 'தூய்மையான' என்ற பொருளில் வழங்கி வருகின்றது. 'Chaste English' என்ற மரபுத்தொடர் பிறமொழிச் சொற்கள் கலவாத, தூய ஆங்கிலத்தைக் குறிக்கும். ஆனால் அகராதிகளில் 'தூய்மை' என்பதனைக் காட்டிலும் நடைமுறையில் வழங்கிய 'abstaining from unlawful or immoral (also from all) sexual intercourse'; 'Pure in thought, word and deed' -especially sexually pure' என்ற கருத்திற்கு முக்கியத்துவம் தரப்பட்டுள்ளது.

தற்கால ஆங்கிலத்தில் (Modern English) Chastity' வழங்கப் படும் முறையை நினைவிற்கொண்டு 'கற்பினை' chastity யாக ஒரு மொழிபெயர்ப்பாசிரியர் மொழிபெயர்த்திருக்கிறார். மற்றொரு மொழிபெயர்ப்பாசிரியர் 'Wedded faith' என மொழிபெயர்த்-

திருப்பது ஆய்விற்கு உரியது. ஏனெனில் 'faith' எனும் வழக்கு சமூகம், பண்பாடு சார்ந்தது அன்று ; சமய வழக்காகும். இதன் அகராதிப்பொருள் 'ஆதாரமில்லாமல் நம்புவது' ஆகும். இதனால் கடவுள் நம்பிக்கை இச்சொல்லால் குறிப்பிட்டனர். 'wedded faith' என்பது திருமணத்திற்காக ஏற்பட்ட நம்பிக்கையைக் குறிக்கிறது. மணந்தவனின் நம்பிக்கைக்கு உரியவளாய் மனம், மொழி, செயல் ஆகிய மூன்றிலும் ஒன்றாய் இருப்பதனை இத்தொடர் விளக்கு-கிறது எனக்கொள்ளலாம். இப்பண்பினைப் பெண்களுக்கே உரியதாகக் கொள்ளாமல் இரு பாலாருக்கும் பொதுவாகக் கொள்வதற்கும் இம்மொழிபெயர்ப்பு உதவுகிறது. 'faith' என்பது பாலுறவு தொடர்பான தூய்மையை மட்டும் குறிக்கவில்லை Chastity, incest ஆகியன பாலுறவுத் தொடர்புகளுக்கான விதிமுறைகளுக்குட்பட்டன.

10. வகைமை காட்டல் (Classifier)

பண்பாட்டுச் செய்தியை மொழிபெயர்க்கும்போது அதற்குரிய இணையான வடிவம் கிடைக்கப்பெறாத நிலையில் பொதுப் பண்பினைச் சுட்டி, பின்னர் குறிப்பிட்ட பண்பாட்டுக்கூறு எவ்-வகையான சிறப்புப் பண்பினைப் பெற்றிருக்கிறது என்று விளக்கு வதனை நைடா 'Classifier' என்பார். வகைமை காட்டலை மொழிபெயர்ப்பு உத்திகளுள் ஒன்றாகக் கூறலாம்.

'Wedded faith' என்ற மொழிபெயர்ப்பில் 'வகைமை காட்டல்' எனும் முறை இடம்பெற்றுள்ளது. 'Faith என்பது பொதுவானது, ஆனால் 'Wedded faith' என்பது இந்நம்பிக்கை திருமணத்தோடு தொடர்புடைய நம்பிக்கை என்பதனை உணர்த்துகிறது. கணவனின் நம்பிக்கைக்கு உரியவளாகமனைவியும், மனைவியின் நம்பிக்கைக்கு உரியவனாகக் கணவனும் மன உறுதிப்பாட்டுடன் இருப்பனை 'wedded faith' விளக்குகிறது, மூல நூலாசிரியரான பாரதியார் புலப்படுத்திய 'கற்பு நிலையை' 'Chastity, wedded faith' அக்கற்பு நிலையில் நெருங்கிய இணையாக (the closest equivalent) இருப்பதனை உணரலாம்.

தூய்மை, உறுதிப்பாடு என்ற பொருளை உணர்த்தும் Chasitty, faith ஆகிய சொற்கள் ஒரே பொருட்களத்தைச் (Semantic field) சேர்ந்தனவாயினும் 'wedded faith' என்பது கற்பெனும் பண்பாட்டுக் கூறினுடைய தனித்தன்மையை (specifioform) புலப்படுத்தியிருககிறது. மற்றொரு மொழி பெயர்ப்பாளரான எஸ். இராமகிருஷ்னன் 'கற்புநிலையை'

Conjugal fidelity என மொழிபெயர்த்திருப்பது 'Wedded life' உடன் ஒப்பு நோக்கற்குரியது. 'Chastity' பொதுவாக (Generic Term) விளக்கியிருக்கிறது. 'Faith' என்பதற்கு 'பற்றுறுதி' என்ற கிறித்துவத் திருமறை மொழிபெயர்ப்பையும் இவண் ஒப்பிடலாம். ஒருவரிடத்து ஒருவர் கொள்ளும் பற்றுறுதி அல்லது விசுவாசம் Faith Chasity கற்பு என்ற பண்பாட்டுக் கூறாகப் பரிணமிக்கிறது. இவ் இரு ஆங்கிலச் சொற்களும் சமயப் பின்புலமுடையனவாதலால் இரண்டும் ஒரே பொருட் களத்தில் அமைகின்றன. ஆனால் மூல நூலாசிரியரின் மனக் கருத்தினைப் புலப்படுத்துவதற்கேற்ற சொல்லை மொழி பெயர்ப்பாசிரியர் தேர்ந்தெடுக்கும் முயற்சியில் 'கற்பு' என்னும் திண்மையை, உறுதியான மனப்போக்கு (மண வாழ்வில்) என்ற பொருளைத் தரும் 'Wedded Faith' ல் காணலாம்.

முடிவுரை :

பண்பாடும் மொழியும் இணைந்திருப்பதனாலும் காலமும் கருத்தும் மாறி வருவதனாலும் பண்பாட்டுக் கருத்துக்களைத் (தருமொழி சாராத முற்றிலும் வேறோர் இனத்தைச் சேர்ந்த) பெறுமொழியில் மொழிபெயர்த்து அளிப்பதுசிக்கலானபணியாகும். இந்நிலையில் மூலநூல் ஆசிரியரின் காலமும் சூழலும் அருடைய மனக்கருத்தும் பெறுமொழி வாசகருக்கு வேறுபட்டவையாகத் தோன்றும். ஆயினும் மொழிபெயர்ப்பாசிரியருக்கு மூலநூல் தரும் பண்பாட்டுச் செய்தியினை ஆழமும் அழுத்தமும் மாறாமல் தரவேண்டிய கட்டுப்பாடும் உண்டு. பெறுமொழியில் தக்க சொல் இல்லாவிட்டாலும் தகுதியானவை எனக் கருதக்கூடிய பல சொற்கள் காணப்படும். இந்நிலையில் நெருங்கிய இணை வடிவத்தைப் பெறுவதற்காக, இதன்மூலம் மூலநூல் வாசகர் பெற்ற உணர்வை மொழிபெயர்ப்பினைப் படிப்பவருக்கும் ஊட்டுவதற்காக சொற்களைச் சேர்த்து புதியவற்றை உருவாக்கலாம் (Wedded, faith). இச்சொல்லாக்கம் பொருட்களைச் சிக்கலைத் தவிர்த்துப் புரிதிறனை விரிவாக்கும்.

உயிர்களின் பிறப்பு - ஓர் ஒப்பாய்வு

(நன்னூல், இலக்கணவிளக்கம்)

ச. அ. இரெ. பரதராஜ்,
கன்னியாகுமரி.

நன்னூல், இலக்கணவிளக்கம் ஆகிய இரு இலக்கண நூல்களும் எழுத்துக்களின் பிறப்பு பற்றிக் கூறும் கருத்துக்களை மொழியியல் நோக்கில் ஒப்பிட்டாய்ந்து, அவை வேறுபடுமிடங்களை விவரிப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

1. ஒலியுறுப்புக்கள் :

எழுத்துக்கள் பிறத்தற்குக் காரணமான உரம், கண்டம், உச்சி, மூக்கு, இதழ், நா, பல், அணம் எனும் உறுப்புக்களுள் நன்னூல் (74) 'கண்டம்' எனச் சுட்டுவதை இலக்கண விளக்கம் (9) 'மிடறு' எனக் குறிப்பிடுகின்றது.

இரு நூல்களும் உரம் முதலான நான்கையும் ஒரு நிலையிலும் இதழ் முதலான ஏனைய நான்கையும் மற்றொரு நிலையிலும் குறிப்பிடினும், இலக்கணவிளக்க உரை (9) உரம் முதலானவற்றை நிலைக்களன்கள் எனவும், இதழ் முதலானவற்றை உறுப்புக்கள் எனவும் குறிப்பிடுகின்றது.

இருநூல்களும் ஒலியுறுப்புக்களை இருநிலைகளாகக் குறிப்பிடுவதால், முன்னவற்றைக் காற்றறைகள் எனவும், பின்னவற்றை ஒலியெழுப்பிகள் எனவும் கருதுவதாகக் கொள்ளலாம் மேலும், இக்கால மொழியியலார் (டேவிட் ஆபர் குரோம்பி, 1980 : 21) நுரையீரல், குரல்வளை, வாயறை என்ற உறுப்புக்கள் முறையே உயிர்த்தல், குரலெழுப்புதல், ஒலித்தல் ஆகிய தொழில்களைச் செய்து எழுத்துக்களைப் பிறப்பிக்கின்றன எனக் கூறுவதால், இரு நூல்களும் உரம், கண்டம், உச்சி எனச் சுட்டும் நிலைக்களன்கள் முறையே நுரையீரல், குரல்வளை, வாயறை என்பவற்றையே குறிப்பதாகக் கருதலாம்.

நன்னூல் (74) உடலின் உண்ணின்று வெளியேறும் காற்றுப் பிறந்து இறும் நிலைநோக்கி மொழியியல் அடிப்படையில் (பிளாக்-டிராகர், 1942, ப. 12) உரம், கண்டம், உச்சி, மூக்கு என வரிசைப்படுத்திக் கூறுகிறது.

இலக்கணவிளக்கம் (9) ஒலிகள் வேறுபடக் காரணமான ஒலியுறுப்புக்களை உச்சி தன்னில் கொண்டிருத்தலாலும், பிற உறுப்புக்கள் அனைத்திலும் சிறப்புடையாததாலும், முன்னோர் மொழிபொருளைப் பொன்னேபோல் போற்றல் வேண்டி முதல் நூலாகிய தொல்காப்பியத்தை அடியொற்றியும் உறுப்புக்களின் பயன்பாட்டடிப்படையிலும் உச்சியை முன்னிறுத்தி மிடறு, உரம், மூக்கு என வரிசைப் படுத்திக் கூறுகின்றது.

வல்லின மெய்கள் உரத்தை இடமாகக் கொண்டு பிறக்கும் என நன்னூல் (75) கூற, உச்சியை இடமாகக் கொண்டு இவை பிறக்குமென இலக்கண விளக்கம் (10) குறிப்பிடுகின்றது. உரத்தினின்று எழும் காற்றே அனைத்து எழுத்துக்களும் தோன்றக் காரணமாய் நிற்பினும், அக்காற்று மிடற்றினின்றே ஒலிவடிவம் பெறுவதன்றி, உரத்தினின்று பெறாமையினாலும், வல்லின எழுத்துக்களின் தனித்தனிப் பிறப்புக்களுக்குக் காரணமான உறுப்புக்களும் உச்சியினுள் அடங்குதலானும் வல்லின எழுத்துக்களின் நிலைக்களன் உச்சி என இலக்கண-விளக்கம் கூறுவதே ஏற்புடையதாகும்.

இலக்கண விளக்க உரை (12) அண்ணத்தை முதல், இடை, கடை எனப் பகுத்துக் கூறுகின்றது. நன்னூல் இவ்வாறு பகுத்துக் கூறவில்லை. ஆயினும் நன்னூல் (80) 'அடியணம்' எனக் குறிப்பிடுதலின், இவ்வாறு பகுக்கும் நோக்குடையது என்பது விளங்கும்.

2. எழுத்துக்களின் பிறப்பு முயற்சி :

நன்னூல் (88 எழுத்துக்கள் எடுத்தல், படுத்தல், நலித்தல் என்ற மூன்று ஒலி முயற்சிகளால் தத்தம் பிறப்புக்களில் வேறு பாடடைகின்றன என்று கூற, இலக்கண விளக்க உரை (14) இவற்றோடு விலங்கல் என்பதும், தலையிசை, மிடற்றிசை, நெஞ்சிசை, மூக்கிசை என்பனவும் இத்தகைய வேறுபாட்டை உண்டாக்குகின்றன என்று கூறி மாறுபடுகிறது.

எடுத்தல் முதலானவற்றை 'ஒலிமுயற்சி' என நன்னூல் சுட்டுவதைப்போல' இலக்கண விளக்கம் சுட்டவில்லையா யினும் இது எடுத்தல் முதலானவற்றையும், தலையிசை முதலானவற்றையும் இருவேறு பகுதிகளாகச் சுட்டுதலின், இது நன்னூலைப் போல எடுத்தல் முதலானவற்றை ஒலி முயற்சி களாகவே கொள்கின்றது எனலாம்.

நன்னூல் (75) எழுத்துக்கள் உரம் முதலானவற்றை நிலைக்களன்களாகக் கொண்டு பிறக்கின்றன என்று கூற, இலக்கண விளக்கம் (10) எழுத்துக்கள் உரம் முதலானவற்றை நிலைக்களன்களாகக் கொண்டு அவ்வந் நிலைக்களன்களில் இசைக்கும் ஓசையால் பிறக்கின்றன என்று மாறுபட்டுச் சுட்டுகின்றது.

இலக்கணவிளக்க உரை (10) 'இசையின்றோன்றும்' என்ற தொடருக்கு, 'நிலை பெற்றிசைக்கும் ஓசையின் றோன்றும்' எனப் பொருள் கூறுதலின், 'நிலைக்களன்களில் காற்று நிலைபெறும்' என்பது பெறப்படுதலின், இது உரம் முதலான நிலைக்களன்களைக் காற்றறைகள் என்று கொள்வதை உறுதி செய்வதோடு 'இசைக்கும் ஓசை எனக் கூறுவதால் அவ்வந்நிலைக்களன்களில் நின்றே எழுத்துக்கள் ஒலிக்கும் தன்மையைப் பெறுகின்றன என்பது பெறப்படுதலின், இது, இதழ் முதலான உறுப்புக்களை ஒலியெழுப்பிகள் என்று கொள்வதையும் உறுதிப்படுத்துகின்றது.

நன்னூல் (76-78, 83, 84) எழுத்துக்கள் அங்காத்தல், உறுதல், இதழ் குவிதல், வருடுதல், நா விளிம்பு வீங்குதல் நா விளிம்பு வீங்கி ஒற்றுதல் ஆகிய முயற்சிகளால் ஒலி வேறுபாடு கொள்கின்றன எனக்கூற, இலக்கண விளக்கம் (12) இவற்றோடு 'கண்ணுற்றடைதல்' என்றும் முயற்சியையும் சுட்டுகின்றது.

நன்னூல் சுட்டாத 'கண்ணுற்றடைதல்' என்னும் முயற்சியை இலக்கணவிளக்கம் ஒலிப்புடை அண்ண ஒலியின் பிறப்பிற்குரிய சிறப்பு முயற்சியாகக் கூறுகின்றது எனலாம்.

3. எழுத்துக்களின் பிறப்புரிமை :

உயிரின் முயற்சியால் உடலின் உண்ணிற்கும் காற்று, உரம், கண்டம், உச்சி, மூக்கு ஆகிய நிலைக்களன்களை உற்று. இதழ், நா, பல், அணம் ஆகியவற்றின் தொழில்களால் வேறுபட்ட ஒலிகளாகப் பிறக்கின்றன என இரு நூல்களும் (நன். : 74 : இல. விள. : 9) கூறுகின்றன.

உந்தி (உதரவிதானம்) மேனோக்கி விரியுங்கால் நுரையீரல்கள் சுருங்க, அதனால் அவற்றினுள் நின்ற மூச்சுக்காற்று வெளியேறி, மிடற்றினுள் அமைந்த குரல்வளையிலுள்ள நாண்களின் முயற்சியோடு, தலையிலுள்ள ஒலியுறுப்புகளில் முயற்சி வேறுபாடுகளுக்கு ஏற்ப வெவ்வேறு எழுத்துக்களாக ஒலிக்கின்றன எனும்

இக்கால மொழியியலார் கருத்து (பிளாக்-டிராகர், 1942, பக். 12) இரு நூல்களிலும் காணப்படுகின்றது.

3. 1. முதலெழுத்துக்கள் :

இருநூல்களும் முதல் எழுத்துக்களுள் உயிர் எழுத்துக்களின் பிறப்பு பற்றிக் கூறும் கருத்துக்கள் இப்பகுதியில் ஆய்வு செய்யப்படுகின்றன.

3. 1. 1. உயிர் எழுத்துக்கள் :

அ. ஆ. :

அ, ஆ என்ற உயிரெழுத்துக்கள் அங்காத்தல் முயற்சியான் பிறக்குமென இரு நூல்களும் (நன். : 76 ; இல. : 11) கூறுதலின், இவை இவற்றை இதழ்குவியா ஒலிகளாகக் கொள்கின்றன எனலாம்.

இ. ஈ. எ. ஏ. ஐ. :

இ, ஈ, எ, ஏ, ஐ என்ற உயிரெழுத்துக்கள் அங்காத்தலோடு அண்பல்லை அடிநா விளிம்பு உறுதலாகிய முயற்சியான் பிறக்குமென இருநூல்களும் (நன். : 77, இல. விள. : 11) கூறுதலின், இவை, இவற்றை இதழ் குவியா ஒலிகளாகக் கொள்கின்றன எனலாம்.

இருநூல்களும் 'முதல்நா' எனச் சுட்டுவதற்கு சங்கர நமச்சிவாயர், சிவஞானமுனிவர் சடகோப ராமாநுஜாசாரியார், கிருஷ்ணமாசாரியாரியார் போன்றோரும் (நன் உரை. 77), இலக்கணவிளக்க உரையும் (12) 'அடிநா' எனப்பொருள் கொள்ளுதலின், இவை, இவற்றை இதழ் குவியாப் பின்னுயிர் ஒலிகளாகவே கருதுகின்றன என்பது உணரக்கிடக்கின்றது.

'அடிநா' என்ற சொல்லாட்சி இருநூல்களிலும் கடைநாவை உணர்த்தியே நிற்றலின், ஈண்டு 'முதல்' என்பதை 'அண்பல்' என்பதுடன் புணர்த்தி அண்பல்லின் முதலை நா விளிம்பு பொருந்த எனப் பொருள் கொள்ளுவதே பொருத்தமாக அமைகின்றது. இவ்வாறு பொருள் கொள்ளுங்கால், இவை, இக்கால மொழியியலார் கொள்வது போல இதழ் குவியா முன்னுயிர் ஒலிகளாகவே அமைகின்றன, (பெ. சுயம்பு, 1985 : 64)

உ. ஊ. ஒ. ஓ. ஔ :

உ, ஊ, ஒ, ஓ, ஔ என்ற உயிரெழுத்துக்கள் இதழ் குவிதலாகிய முயற்சியான் பிறக்குமென இருநூல்களும் (நன் : 78 ; இல. விள. : 11) கூறுதலின் இவற்றை, இவை இதழ்குவி ஒலிகளாகக் கருதுகின்றன எனலாம்.

4. முடிவுரை:

எழுத்துக்கள் பிறத்தற்குக் காரணமான உறுப்புக்களுள் நன்னூல் (74) 'கண்டம்' எனச் சுட்டுவதை, இலக்கண விளக்கம் (9) 'மிடறு' எனக்குறிப்பிடுகின்றது.

இலக்கண விளக்கவுரை (9) உரம் முதலானவற்றை நிலைக்-களன்கள் எனவும், இதழ் முதலானவற்றை உறுப்புகள் எனவும் குறிக்கப்படுகின்றன.

ஒலியுறுப்புகளை நன்னூல் (74) உரம், கண்டம், உச்சி, மூக்கு என வரிசைப்படுத்த இலக்கண விளக்கம் (9) உச்சி, மிடறு, உரம், மூக்கு என வரிசைபடுத்துகின்றது.

வல்லின மெய்கள் உரத்தை இடமாகக் கொண்டு பிறக்கும் என நன்னூல் (75) கூற உச்சியை இடமாகக்கொண்டு பிறக்கும் என இலக்கண விளக்கம்(10) குறிப்பிடுகின்றது. ஈண்டு இலக்கண விளக்கம் கூறுவதே ஏற்புடையதாக அமைந்துள்ளது.

இலக்கண விளக்க உரை (12) அன்னத்தை முதல், இடை, கடை எனப்பகுத்துக் கூறுகின்றது.

நன்னூல் (88) எடுத்தல், படுத்தல், நலிதல் என்ற ஒலி முயற்சிகளைக் கூற இலக்கண விளக்க உரை (14) இவற்றோடு விலங்கல், என்பதையும், தலையிசை, மிடற்றிசை, நெஞ்சிசை, மூக்கிசை என்பனவற்றையும் குறிப்பிடுகின்றது. ஆயினும் இலக்கண விளக்கம் இவற்றை 'ஒலி முயற்சிகள்' எனக் குறிப்பிட-வில்லை.

இரு நூல்களும் (நன். 76-78, 83, 84 :இல. விள.;, 12) ஒலி வேறுபாடடைதற்கான முயற்சிகளைச் சுட்டுமாயினும் இலக்கண விளக்கம் அவற்றோடு 'கண்ணுற்றடைதல்' என்னும் முயற்சியையும் கூறுகின்றது.

பயன்பட்ட நூல்கள்

அ) நூல்கள் (தமிழ்)

1. சங்கர நமச்சிவாயப் புலவர் மற்றும் சிவஞான முனிவர் — 'நன்னூல்', கழக வெளியீடு, சென்னை.

2. சடகோப ராமாநுஜாசாரியார் மற்றும் கிருஷ்ணமாசாரியார், சே., 'வை. மு.' 'நன்னூல்', எஸ். பார்த்தசாரதி ஐயங்கார், வெளியீடு, சென்னை, 1958

ஆ) ஆங்கிலம்

4. Bernard Bloch and George L Trager, — 'Outline of Linguistic Analysis', Linguistic Society of America, Baltimore, 1942.

5. David Abercrombie, — 'Elements of General Phonetics' 10th Ed., Edinburgh University Press, Edinburgh, 1980.

இ) ஆய்வேடு

6. சுயம்பு, பெ., 'தொல்காப்பியமும் இலக்கண விளக்கமும்-ஓர் ஒப்பாய்வு' (எழுத்தும் சொல்லும்)' (வெளிவராத பி.எச்.டி.ஆய்வேடு), மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை, 1985.

சென்ற இதழ்த் தொடர்ச்சி

பழந்தமிழர் வழிபாடு

புலவர் க. மா. வீரணன், எம். ஏ., பி. லிட்.,
மணல்மேடு,
உசிலம்பட்டி - 626 532.
மதுரை மாவட்டம்.

இனிப் பொதுவாகச் சில கடவுளர்களைக் குறித்துக் காண்போம்.

"பரவியுந் தொழுதும் விரவுமலர் தூயும்
வேறுபல் உருவிற் கடவுட் பேணி"

எனக் கபிலர் கூறுவதால் அவர் காலத்தில் வேறுபட்ட வடிவினையுடைய பல தெய்வங்கள் இருந்தன என்பதை அறிகிறோம்.

"தொன்றொழுகு மரபிற் றம்மியல்பு வழாஅது
அருந்திறற் கடவுட் பழிச்சியே'

கடவுட்குரிய இலக்கணத்தில் ஒரு சிறிதும் குறையாமல் அரிய பெரிய வலிமையையுடைய மிகத் தொன்மையான கடவுளென்று மலைபடு கடாம் போற்றுகிறது.

ஊர் அம்பலங்களில் அமைக்கப்பட்டுள்ள நூல்களில் தெய்வத்தை வழிபடுவது பண்டைக்கால வழக்கம்.

'கலிகெழு கடவுள் கந்தங் கைவிடப்
பலிகண் மாறிய பாழ்படு பொதியில்' எனப் புறநானூறும்,
'கந்துரைப் பொதியில்' எனப் பட்டினப்பாலையும் கூறும்.

சோழன் கரிகாலன் அரண்மனையில்,
'அந்திமாட்டிய நந்தா விளக்கின்
மலரணி மெழுக்க மேறிப் பலர்தொழ
வம்பலர் சேக்குங் கந்துடைப் பொதியில்' என்பதற்கு,

'அந்திக் காலத்தே கொளுத்தின அவியாத விளக்கினையுடைய பூக்களைச் சுட்டின தறியினையுடைய அம்பலம்" என நச்சர் உரை எழுதியுள்ளார். 'சதுக்கமும், சந்தியும் புதுப்பூங் கடம்பும் மன்றமும், பொதியிலும் கந்துடை நிலையிலும்' என முருகாற்றுப்படையும் இதனை அரண் செய்கிறது.

'மையறு சிறப்பிற் தெய்வம் சேர்த்திய
மலரணி வாயிற் பலர் தொழு கொடியும்''

பிறப்பறுப்பதற்குக் காரணமான தெய்வத்தின் கொடியை மலர் அணிவித்துப் பல சமயத்தினரும் தொழுதனர்.

இனி இல்லங்களில் வாழும் தெய்வங்களைக் குறித்து, 'அணங்குடை நல்லில்' என மதுரைக் காஞ்சி கூறுகிறது. மாலைக் காலத்தில் மகளிர் நெல்லும், மலரும் தூவி அவ் வில்லுறை தெய்வத்தை வழிபட்டதை, 'நெல்லும் மலரும் கைதொழுது' என்ற அடியால் அறியலாம். ''கொடியிடையார் அகன்ற மனையிடமெங்கும் கதிரோன் மறைந்த மாலைக் காலத்தே அரும்பு புரி நெகிழ்ந்த முல்லையினது ஒளிமலரை நெல்லோடே தூவி இல்லுறை தெய்வத்தை வணங்கினர்' என அடியார்க்கு நல்லாரும் தம் உரையில் எழுதியுள்ளார்.

இரவில் இரண்டாம் சாமத்திற்கும், நான்காம் சாமத்திற்கும் இடைப்பட்ட காலத்தில் தெய்வம் உலாவரும் என்பதை, 'கடவுள் வழங்குங் கையறு கங்குல்' எனக் குறித்துள்ளனர். பாம்புகள் வாழும் மருதமரத்தின் அடியில் உள்ள தெய்வத்திற்குப் பலி கொடுத்துப் பரவினர் என்பதை,

'பாம்புறை மருதி னோங்கு சினை நீழல்
பலிபெறு வியன்கள மலிய வேற்றி'

என்றும், அப்பலியைத் தேக்கிலையில் கொடுத்தனர் என்பதை 'தெய்வ மடையிற் றேக்கிலை குவைஇ' எனவும் பாடல் அடிகள் பகர்கின்றன.

நல்லியக் கோடனின் அரண்மனை மேருமலை போல் உள்ளது. வாயிற்கதவு திறக்கும் போது அங்கு வாழும் கடவுள் கண்ணைத் திறந்து பார்ப்பது போல் உள்ளது. 'கடவுள் மால்வரை கண் விடுத்தன்ன' என்பதால் உயர்ந்த பொருள் களை உவமையாக்கிக் காட்டுவதில் சங்கப் புலவர்கள் சாலச் சிறந்தவர்கள் என்பதை அறியலாம்.

வானுயர்ந்த மலைச் சிகரங்களில் கடவுளைக் கண்டு அதை,

'அருந்திறற் கடவுள் காக்கு முயர் சிமைப்
பெருங்கல் நாடன் பேகன்'

எனப் பெருஞ்சித்திரனார் போற்றுகிறார். இனிக்களர் நிலத்தில் வளர்ந்துள்ள கள்ளியின் நிழலிலும், கடவுள கண்டு,

'கள்ளி நீழற் கடவுள் வாழ்த்தி'

எனப் போற்றுகிறது புறநானூறு.

இனி வேள்வித் தீயின் இனிய மனத்தை நுகர்ந்து தேவர்கள் மகிழ்ச்சியடைந்தனர் என்பதை,

'வாடாப் பூவினிமையா நாட்டத்து
நாற்ற வுணவி னுருகெழு பெரியோர்'

என மதுரைக் காஞ்சி எடுத்துரைக்கிறது.

அதிகமான் செய்த வேள்வியின் ஆவுதி பெற்ற தேவர்கள் பெறற்கரிய கரும்பைப் பூவுலகில் பயிரிடக் கொடுத்தனர்.

'அமரர்ப் பேணியு மாவுதி யருத்தியும்
அரும்பெறன் மரபிற் கரும்பி வட்டந்தும்'

என புறநானூறு 99 ஆம் பாடல் இயம்புகிறது.

கடவுளுக்கு விருப்பமான மலர்களில் தாமரையே தலை-சிறந்தது என்பதை, 'கடவுட் கயத்தமன்ற சுடரிதழ்த் தாமரை' என மதுரைக் காஞ்சியும் 'தீப்பட மலர்ந்த கடவுளொண்பூ எனப் பெரும்பாணாற்றுப் படையும், 'திருமுருக மவிழ்ந்த தெய்வத் தாமரை' எனச் சிறுபாணாற்றுப் படையும், 'தாமரை புரையும் காமர் சேவடி' எனப் பெருந்தேவனாராலும் எடுத்தாளப் பட்டுள்ளது.

எனினும் நன்மலரினும் சேராமல் தீயமலரிலும் சேராமல் இகழத்தக்க எருக்கம்பூவையும் இறைவன் ஏற்றுக்கொள்வான் என்பதை,

'நல்லவு நீ தீயவு மல்ல குவியிணர்ப்
புல்லிய யெருக்க மாயினு முடையவை'

எனக் கபிலர் போன்ற சான்றோர் கூறும் கருத்தையும் கருத்தில் கொள்ள வேண்டியுள்ளது.

இசைக்கு மயங்காத கடவுள் இத்தமிழகத்தில் இல்லை என்பதை இனிக் காணலாம். 'கடவுள்கடன் கழிப்பிய பின்றை' என்ற அடியில் ஒரு பொருநன் தனது தடாரி என்னும் வாத்தியத்தை வாசித்துக் காட்டில் வாழும் தெய்வத்தை மகிழ்ச்சி யடையச் செய்தான். யாழ் முதலிய இசைக் கருவிகளில் தெய்வம் வாழ்கிறது. அவற்றை வாசிக்கும் போது ஆறலை கள்வர்களும் தம் ஆயுதங்களைக் கீழே போட்டு விடுவார்களாம்.

'அணங்கு மெய்ந்நின்ற அமைவரு காட்சி
ஆறலை கள்வர் படை விட

எனப் பொருநராற்றுப்படை கூறுகிறது.

இராவணன் தென்னாட்டுக் குடிகளை துன்புறுத்தி வந்தான். அகத்தியர் பொதியமலை உருகும்படி யாழ் இசைத்து அவனை வென்று இலங்கைக்கு விரட்டினார். இதை மதுரைக்காஞ்சி,

'தென்னவற் பெயரிய துன்னருந் துப்பின்
தொன்முது கடவுட் பின்னர் மேய' எனக் குறிப்பிடுகிறது.

அந்நாளில் காஞ்சி பல்துறைகளிலும் சீரும் சிறப்புமாக வெற்றி மேம்பட்ட பழமையான நகரமாக விளங்கியது. அங்கு பல சமயத்தாரும் விழா கள் எடுத்துத் தத்தம் தெய்வத்தை வழி பட்டனர் என்பதை,

'மலர்தலை யுலகத்துள்ளும் பலர்தொழ
விழவு மேம்பட்ட பழவிறன் மூதூர்'

எனப் போற்றப்படுகிறது.

மலையில் வாழும் குறவர்களும் கடவுளுக்கு விருப்பமான பலி யிட்டு வேண்டுங்காலத்து மழையைப் பெற்றும் வேண்டாங் காலத்து அதை நிறுத்தியும் வாழ்ந்தனர், என்பதை

'மலைவான் கொள்கென வுயர்பலி தூ உய்
மாரியான்று மழை மேக்குயர் கெனக்
கடவுட் பேணிய குறவர் மாக்கள்!

எனக் கபிலர் பாடியுள்ளார்.

போரில் வெற்றி பெற்று வாகை சூடுவதையும்,
'போர்படு மள்ளர் போந்தொடு தொடுத்த
கடவுள் வாகை (66) எனப் பதிற்றுப்பத்துப் பாடுகிறது.

'கடவுள் கற்பின் மடவோள்' (அகம்) எனக் கற்புக்கு கடவுட் தன்மை கொடுத்தது சங்க இலக்கியமேயாகும்.

காட்டில் கடவுளை நோக்கிக் கடுந்தவம் இயற்றும் முனிவர்களுக்கு அக்காட்டிலுள்ள யானை விறகு கொண்டு வந்து தருகிறது. அவ்விறகின் தீயில் அம்முனிவர்கள் தம் நீண்ட சடைமுடியின் ஈரத்தை உலர்த்துகின்றனர். இதை,

'கானயானை தந்த விறகின்
கடுந்தெறற் செந்தீ வேட்டுப்
புறந்தாழ் புரிசடை யுலர்த்து வோனே'

எனப் புறநானூறும்,

'செந்தீப் பேணிய முனிவர் வெண்கோட்டுக்
களிறுதரு விறகின் வேட்டும்'

எனப் பெரும்பாணாற்றுப்படையும் கூறுகின்றன.

பெருஞ்சித்திரனாரின் மனைவி அல்லலுற்று ஆற்றாது,

'மாசொடு குறைந்த வுடுக்கைய ளறம் பழியாத்
துவ்வாளாகிய வென் வெய்யோளும்'

என வறுமைக் கொடுமையால் அறக் கடவுளைப் பழிக்கும் அவலத்தையும் காண்கிறோம். வள்ளுவரும்

'இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின், பரந்து
கெடுக உலகியற்றி யான்'

எனக் கடவுளைக்கடுமையாகச் சாடியதை அனைவரும் அறிவர்.

ஓர் இல்லத்தில் மண முழவு ஒலிக்கிறது. எதிர் இல்லத்தில் சாப்பறை ஒலிக்கிறது. இவ்வாறு படைத்தானே இறைவன்!

'புணர்ந்தோர் பூவணி அணியப் பிரிந்தோர்
பைதலுண்கண் பணிவார் புறைப்பப்
படைத்தோன் மன்றவப் பண்பிலாளன்'

எனப் பக்குடுக்கை நன்கணியார் படைத்த நான்முகனைப் பழித்துப் பேசும் அவலத்தையும் பார்க்கிறோம்.

போரில் இறந்த வீரனுக்கு மக்கள் செலவொழியாத சாலையில் நடுகல் நாட்டி, அதில் அவன் பேரும், புகழும் பொறித்து வழிபாடு செய்தனர். இதனை,

'நல்லமர்க்கடந்த நாணுடை மறவர்
பெயரும் பீடு மெழுதி யதர் தொறும்
பீலி சூட்டிய பிறங்கு நிலை நடுகல்'

என அகநானூறு கூறுகிறது. களத்தில் உயர்ந்த கோட்டினையுடைய யானையைக்கொன்று, தாமும் விழுப்புண்பட்டு இறந்த வீரனின் நடுகல் கடவுளினும் மேம்பட்டதாகும். நெல்லைச் சொரிந்து வழிபடும் இதனினும் உயர்ந்த வேறு கடவுள் இல்லை என்பது மாங்குடி கிழார் கருத்தாகும்.

'ஒளிறேந்து மருப்பிற் களிறெறிந்து வீழ்ந்தெனக்
நெல்லு குத்துப் பரவுங் கடவுளுமிலலை' (புறம்).

இதுவே பழந்தமிழரின் சிறந்த வழிபாடாகும்.

சமயவுணர்வு தோன்றாத சங்க காலத்தே கடவுளரிடையே உயர்வு தாழ்வில்லை. கடவுள் பெயரால் கட்சிகள் தோன்றவில்லை. ஆனால் பிற்காலத்தில் சமயப்போரே வெடித்தது. அது இன்னும் உலகை ஆட்டிப்படைக்கிறது. இராமலிங்க அடிகள் போன்றோர் சமயங்களிடையே சமரசம் காண முயன்றனர். அனைத்துலகச் சமயங்களுக்கும் கருத்துக்களை அள்ளித்தந்தவர்கள் நமது முன்னோர் என்பதை நாமே உணரவில்லை. இயேசுநாதர் நீண்ட காலம் இமயமலைச்சாரலில் தங்கி ஞானம் பெற்றார் என ஒருவரலாற்றாசிரியர் கூறுகிறார். குமரனைக் குமாரனென்றும் மாரியை மேரிஎன்றும், சாமிவேலை, சாமுவேல் என்றும் கூறுவர். பிதா சுதன் பரிசுத்த ஆவி. இவர்கள் நமது திரிமூர்த்தி போன்றவர்கள். இத்திரி என்னும் சொல் கிரீக், லத்தீன் ஆகிய மொழிகளையெல்லாம் கடந்து இன்று ஆங்கிலத்திலும் வழங்குகிறது. மேற்கண்ட மூவரில் இடையில் நின்ற அச்சுதனைக் குறித்து நமது ஆழ்வார்,

'அச்சுதா அமரரேறே ஆயர்தம் கொழுந்தே'

எனப்பாடியுள்ளார். இங்கு ஆழ்வார் பன்னிருவரைப்போல அங்கும் பன்னிரு சீடர்கள் உள்ளனர், கந்தரலங்காரத்தில்,

'குரல் நடுங்க வெற்பை இடிக்கும்
கலாபத் தனிமயில் ஏறும் இராவுத்தனே'

என அருணகிரியார் பாடுகிறார்.

எனவே தமிழில் சமய வெறி இல்லை. மொழி வெறி உண்டு. அவ்வெறி உள்ளவரே தமிழறிஞர்;

அன்று அரசஞ்சண்முகனார், சூரிய நாராயண சாஸ்திரியார், பாண்டித்துரைத்தேவர் போன்றோர் தம் தோள் கொடுத்துத் தமிழைத் தாங்கினர். இன்று தமிழின் தோள்களில் சவாரி செய்யும் தமிழறிஞர்களைக் காண்கிறோம்.

எத்தனையோ இருண்ட காலங்களைக்கடந்துவந்த தெய்வத் தமிழ் இதையும் எளிதில் கடந்து விடும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

பாண்டியன் பல்யாக சாலை முதுகுடுமிப் பெருவழுதியைப் போல் சங்க கால மன்னர் பலர் யாகம், வேள்வி, ஆவிதி கொடுத்தல் ஆகியவற்றில் பெரு விருப்புடையராய் இருந்தனர். இவை மூடக் கொள்கைகளென்று இன்று, நேற்றல்ல, ஈரோட்டு நாயக்கர் முரசு கேட்டல்ல, அன்றைக்கே புத்தர் போன்றவர் களால் வெறுத்து ஒதுக்கப்பட்டவை. இது குறித்து இன்றைய அறிவியலார் நிலை என்ன என்பதைக் காண்போம்.

“ 12 நாள் வேதயாகம் ஒன்றை கேரளத்தில் நடத்தி, அதனால் இயற்கைச் சூழலில் மாற்றங்கள் ஏற்படுகிறதா ? என்ன மாற்றங்கள் ஏற்படுகின்றன ? என்பதை இந்திய மேனாட்டு விஞ்ஞானிகள் நுண் கருவிகள் மூலம் ஆராயப் போகிறார்கள். கேரளத்தில் குண்டூர் என்ற இடத்தில் நடத்தப்படவிருக்கும், இந்த 12 நாள் யாகத்தின் பெயர் ‘ அதிராத்ரம் ’ என்பது. இது சோம யாகங்களில் ஒன்று. ஏப்ரல் 28 ஆம் நாள் இந்த யாகம் தொடங்கும். மனிதர் விளைவித்த மாற்றங்களால் உலகெங்கும் இயற்கைச் சூழல் பாழ்பட்டு வருகிறது. இயற்கைச் சூழலைப் பாதுகாப்பது மனிதகுல நல்வாழ்வுக்கு அவசியம் என்ற நோக்கம் கொண்ட அமைப்புகளில் ஒன்று, ‘ ஸ்ரௌத சாஸ்த்ர பரிசத் ’ என்பது. அதிராத்ர யாகத்தை நடத்தி, அதன் பௌதிக விளைவுகளை நிரூபித்துக் காட்ட பரிசத் தீர்மானித்தது. இம் முயற்சியில் இறங்கியுள்ளது.

சென்னை காந்த உயிரியல் கழக இணை இயக்குநர் டாக்டர் சங்கர நாராயணன் தலைமையில் இந்திய விஞ்ஞானிகள் குழு வொன்று யாகத்தால், பூமி காந்தப் புலனில் மாற்றங்கள் ஏற்படுமா ? என்பதை ஆராயும். செக், கனடா, இங்கிலாந்து ஆகிய நாடுகளைச் சேர்ந்த விஞ்ஞானியர் மூவர் இதில் கலந்து கொள்கின்றனர்.

முழு விபரம் : 28—4—90 தினமணி மற்றும் ஏப்ரல் 26, 29, 30 மே 7 எக்ஸ்பிரஸ்.

— தகவல் : க. மா. வீரணன்

மதிப்புரை

அரங்க. சுப்பையா, எம்.ஏ., எம்.எட்., எம்.பில்.
தமிழ்விரிவுரையாளர்,
த. உ. க. கலைக்கல்லூரி, தஞ்சை.

[1. நுரைகளும் அலைகளும் - விலை ரூ 3, பக்கம் 24
2. புலமை சுமந்த புயல் - விலை ரூ 7, பக்கம் 80
ஆசிரியர் : ய. மணிகண்டன்,
பூவரசு பதிப்பகம்,
19, சுப்பாதெரு, சென்னை - 33]

புலமை சுமந்த புயல் :

முழுதும் மரபுக் கவிதையால் ஆன நூல் இது. காணுகின்ற பொருள்களை எல்லாம் கவிதைகளாக்கிப் பார்ப்பதில்தான் கவிஞன் மகிழ்ச்சி அடைகிறான். அதையே சமூகமேம்பாட்டிற் காகக் கவிதையாக்கும்போது அவன் மனநிறைவடைகிறான். இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிஞர்களுக்கு உள்ள சிறப்பே சமூக வளர்ச்சிக்குத் தடையாய் உள்ள அனைத்துத் தடைகளையும் விமரிசனம் செய்வது தான். புரட்சியின் பாதை பாடல்களால் போடப்பட்டுவிட்டது. அதை மேலும் மேலும் செப்பனிட்டுச் செம்மைப்படுத்தும் எத்தனையோ கவிஞர்களில் ய. மணிகண்டன் என்பாரும் ஒருவராய்த் திகழ்கின்றார். இந்நூலின்கண் ஏறக்குறைய முப்பதுக்கும் மேற்பட்ட தலைப்புக்களில் கவிதைகள் இயற்றப்பட்டுள்ளன. ஒவ்வொன்றும் ஒரு புதிய செய்தியைத் தரவல்லதாய் அமைந்துள்ளது.

'எனது வேய்ங்குழலில் மானுடகானம்' என்ற முதல் தலைப்பில் கடலின் இயற்கைச் செயல்களுக்கெல்லாம் மானுடத்தின் நிலையை ஒப்பிட்டுக் காட்டுகிறார்.

ஆர்ப்பரிக் கின்ற ஆழியில் பிறக்கும்
அலைகள்ளப் போல்நம் இளைஞர் களெல்லாம்
தீமைக் கரையை மோதிச் சிதைக்கத்
துள்ளி எழவும் கொள்ளிநுரை பொழியவும்
தூண்டும் கவிதையைநீ தீட்டுவ தெப்போது ? (பக். 9-11)

இளைஞர்களைத் தீமை கண்டு எதிர்க்கத் தூண்டும் கவிதை வரிகளாக இவை காணப்படுகின்றன. தமிழாலே அறிவியலைப்

பயிற்றும் நிலை தமிழகத்தில் வரவேண்டும் என்று நீண்ட நாட்களாகக் கிளப்பப்படும் கோரிக்கையை

'தமிழாலே அறிவியலைப் பயிற்றும் - நிலை
தலை யெடுத்தால் புதுமை பல பிறக்கும்'

என்ற வரிகள் மூலம் வலியுறுத்துகிறார். 'கயவர்களுக்குக் காலன் இனிமேல் எருமையின் மேலே ஏறி வரமாட்டான். எனது கவிதையில்தான் ஏறிவருவான்' என்று துணிந்து கூறும் போக்கு இந்நூலின் கண் பல இடங்களில் அமைந்துள்ளது. வறுமையில் வாடும் சமூகக்கொடுமையை ஆங்காங்கே கவிஞர் நினைவு கூர்கிறார்.

புண்களே மேனியைப் போர்த்தி யிருப்பதால்
ஈக்களும் கொசுக்களும் இவளிடம் அடைக்கலம்.

என்பது ஓர் ஏழையின் நிலையைப் படம்பிடித்துக் காட்டுவதாக அமைந்துள்ளது, 'குழந்தைப்பாடல்கள்' என்ற தலைப்பில் அமைந்த கவிதைகள் தமிழர்தம் மரபையொட்டிக்குழந்தைகளுக்கு அறிவுரை கூறுவனவாக அமைந்துள்ளன.

'புலமை சுமந்த புயல்' என்னும் தலைப்பில் ஞா. தேவநேயப் பாவாணர் என்னும் ஒப்பற்ற தமிழ்ப் பேரறிஞரின் சிறப்பினைக் காட்டும் குறள் வெண்பாக்கள் ஒளி விடுகின்றன.

பாவாணர் யாரென்று
பைந்தமிழர் (?) கேட்கின்றார்
பூவென்றால் என்னென்பார் போன்று
நைந்த தமிழ் மீண்டும்
நலங்கொழிக்கப் பெய்த மழை
செந்தமிழ்க்கு வந்தபுதுத் தெம்பு

மேலும் இக்கவிதைத் தொகுப்பில் பாரதிதாசன், சிந்தன் போன்றவர்களைப் புகழ்ந்து கவிதைகள் இயற்றியுள்ளார்.

பொதுவுடமைப் பாட்டை பொதுப்பணியே வாழ்க்கை
முதுமையிலும் துள்ளும் முயல்

என்பது சிந்தனைப்பற்றி இக்கவிஞர் சிந்திய வரிகள்.

நுரைகளும் அலைகளும் :

பாரதியின் வசனக் கவிதை போல உரைவீச்சாகக் காணப்படும் தொடர்கள் இந்நூலின் கண் அமைந்து கவின் செய்கின்றன. இன்றைய சமூகச் சூழலில் இயற்கைப் பொருள்களை ஏற்றவாறு

கவிஞர் கற்பனை செய்துள்ளார். நட்சத்திரங்கள், முகில்கள், நிலா, இருட்டு, பனித்துளிகள், சூரியன், மின்னல் முதலியவற்றை வியந்து போற்றி உள்ளார்.

வானமே! உன்னிடத்திலும் ஏன்
இத்தனை ஓட்டைகள்
எங்கள் தேசத்தில் தீட்டும் திட்டங்களில்
இருப்பதைப்போல

என்னும் வரிகள் வானுலகையும், பூவுலகையும் இணைப்பது போல் அமைந்துள்ளன. இங்கே தீட்டப்படும் திட்டங்கள் உருவற்று வீணாகிப் போவதை இதன் மூலம் சுட்டிக் காட்டுகிறார் கவிஞர். முகில் என்ற தலைப்பின் மூலம் சாதிமத வேறுபாடுகளைச் சாடுகிறார். நிலாவைப் பார்த்துக் கற்பனையாகக் கூறுவது நகைச் சுவையாகவும் உள்ளது

வானத்தேசத்தின் ஆரங்கள்
இல்லாத அசோகச் சக்கரம்

என்று கூறுவதன் மூலம் கவிஞரின் நகைச் சுவைத்திறம் விளங்குகிறது. 'இருட்டு' என்ற தலைப்புச் சிறியதாக இருப்பினும் நல்ல பல கருத்துக்களை அரசியல் ரீதியாக இதனுள் அமைத்துள்ளார்.

'அட, நம்ம மந்திரிமார்களின் மனம்'

என்ற தொடர் குறிப்பிடத் தக்கதாய் உள்ளது.

நூலின் இறுதியாக 'அலைகள்' என்ற தலைப்பில் எழுதப்பட்ட கவிதை நயம் உடையதாகவும் சுவை பொருந்தியும் காணப்படுகின்றது.

இப்படித்துள்ளி எழுகின்றாயே!
அலையே!
நீ என்ன பாவேந்தர் பாரதிதாசனின் பாட்டைப்
படித்தஇளைஞனா?

இத்தகைய கருத்துக்கள் கொண்ட பல கவிதைகள் நூலின்கண் காணப்படுகின்றன.

இந்நூல்கள் இரண்டும் படித்தின்புறத்தக்கவை.

(சென்ற இதழ் தொடர்ச்சி)

பிரபஞ்சன் சிறுகதைகள்

டாக்டர் இரா. சண்முகவேலன்,
எம் ஏ., பி டி , எம்.பில் , பிஎச்.டி.,
தேர்வு நிலைத் தமிழ் விரிவுரையாளர்,
அ. வீ. வா. நி. திருபுட்பம் கல்லூரி, பூண்டி - 613 503.

உத்திகள்

ஒரு கலைப்படைப்பில் பொது, சிறப்பு எனும் இரு நிலைகள் அல்லது இரு தளங்கள் உள்ளன இவை முறையே பழமை, புதுமையைக் குறிக்கும். வேறு வகையாகச் சொன்னால் கலைப்படைப்பில் மரபு, மரபுமீறல் எனும் தன்மைகள் காணக் கிடக்கிறன. கலைஞன் தன் பயிற்சிகளாகப் பழமைகளையும் தன் வளர்ச்சிக்காகப் புதுமைகளையும் கையாளுகின்றான். இத்தகைய கையாளுதலைக் கலைத்திறன் அல்லது கைத்திறமை அல்லது கலை நுட்பம் அல்லது உத்தி என்றெல்லாம் கூறுவர்.

பிரபஞ்சனின் கதைகளில் காணக் கிடைக்கும் உத்திகளை மேற்போந்த இரு நிலைகளின் வழியே இங்குக் காண்போம். இதற்கிடையில் பிரபஞ்சனின் கலைக் கொள்கைகளைப் பற்றித் தெரிந்து கொள்வோம்.

> மிகச் சிறந்த படைப்பு எல்லா அம்சங்களும் இணைந்து, எதுவொன்றும் தனியாகத் துருத்திக் கொண்டிராமல், எளிமையாகவே இருக்கிறது. உருவம், உள்ளடக்கம், உத்தி என்றெல்லாம் தனித் தனியே பிய்த்து இலக்கிய விமர்சனம் செய்யும் போது கலை காணாமல் போய்விடுகிறது விஷயத்தின் மேல் கட்டுமானம்தான் உருவம். விஷயத்தின் தகுதியும் தரமும், அது தரப்படும் மேன்மையுமே உருவத்தைத் தீர்மானிக்கிறது.

பிரபஞ்சனின் இக்கூற்றிலிருந்து சிறந்த இலக்கியப் படைப்பு எல்லாத் தன்மைகளையும் உள்வாங்கி உருக்கொண்டு எந்தவொன்றும் தூக்கலாக வெளியில் தெரியாமல் எளிமையாக இலங்கும் என்றும், ஆய்வாளர்கள் புதைபொருள்களைத் தோண்டித் துருவித் துருவி ஆராய்கையில் அதன் மூலமே (கலை) மறைந்து விடுகிறது என்றும் கலைவடிவம் என்பது

கருத்தின் மீது எழுப்பப்பெறும் கட்டுமானம் என்றும் கலை வடிவத்தைக் கருத்தின் தகுதியும் தரமும் நிர்ணயிக்கின்றன என்றும் அறிகிறோம். இம் மதிப்பீடு படைப்பாளரின் கலைக் கொள்கை ஆகும். ஆகவே, பிரபஞ்சனின் கதைகளில் காண லாகும் உத்திகளைக் குறித்து ஆராயும்பொழுது அவர் தம் கலைக் கொள்கைகளும் வெளிப்படுகின்றன.

பிரபஞ்சனின் கதை சொல்லும் உத்தி (Narrative technique) எளிமையானது; நேரானது. சிக்கலுடையதுபோல் தோன்றி னாலும் சிக்கலற்றது. கதை தற்காலத்தில் தொடங்கிக் கடந்த காலத்திற்குத் தாவிப் பின்னர் நிகழ்காலத்திற்குத் திரும்பும். ஆங்கில எழுத்தாகிய Z-இன் வடிவத்தை இதற்குச் சுட்டலாம். இத்தன்மைத்தான உத்தியில் பின்னோக்கு உத்தியில் (Flash back) படைப்பாளரின் பெரும் பகுதிக்கதைகள் அமைந்துள்ளன. இதற்கடுத்த நிலையில் கதை தொடக்கத்திலிருந்து தொடர்ந்து முன்னோக்கி நகர்ந்து வளர்ந்து நிறைகின்ற தன்மையில் (Straight telling technique) அமைந்துள்ள கதைகள் காணப் படுகின்றன. எனவே, பிரபஞ்சனின் கதை சொல்லும்உத்தி இவ் விரண்டிலேயே அடங்கிவிடுகின்றது என்று சுருங்கக் கூறலாம்.

காலம் விரிந்து கிடக்காமல் சுருங்கி இருப்பதால் கதைகளின் வடிவங்கள் நீண்டோ, பருத்தோ இல்லாமல் ஓரளவிற்குப் பொருத்தமாய்க் கூறுகளைப் பெற்றுப் பொருந்தி இணைந்து பொருத்தப்பாடுடையதாய் விளங்குகின்றன. மற்றையோர் கடைபிடிக்கின்ற - குறிப்பாகப் புதுமைப் பித்தன் சோதனை செய்து பார்த்த-துணுக்கு உத்தியை (Tit bit technique) வேண்டிய வேண்டியாங்கு நிதானத்துடன் பிரபஞ்சன் கையாண்டிருப்பதால் அப்படிப்பட்ட கதைகள் கூட வடிவச் சிதைவடையாமல் புகைப் படத்திற்குச் சட்டங்கள் இட்டது போல் இறுக்கமாயும் நெருக்கமாயும் இலங்குகின்றன. 'நிழல்', 'மனசு', 'தட்சணை' 'ராட்சஸக் குழந்தை' நேற்று மனிதர்கள்' 'கதாநாயகி குளித்த கதை', 'மனுஷி' போன்றவை இவ்வுத்தியினால் பின்னப்பட்ட நேர்த்தியான கதைகள் ஆகும்.

நிகழ்ச்சிச் சித்தரிப்பு உத்திக்கு முதலிடம் தரப்படுவதால் படைப்பாளியின் கதைகளில் கதைமாந்தர்களின் செயல்கள், இயற்கை நிகழ்வுகள் பெரிதுபடுத்தப்படுகின்றன. இம்முறை வாசகனுக்குத் தலைசுற்றலை உண்டாக்காமல் கண்டதும் புரிந்து கொள்வதுபோல் படித்ததும் தெரிந்து (புரிந்து) கொள்கிற சக்தியைத் தோற்றுவிக்கின்றது. 'சைக்கிள்' 'அப்பாவு கணக்கில்

35 ரூபாய்', 'ஆண்பிள்ளை', 'சின்னஞ்சிறு வயதில்', 'காலம் இனி வரும்', 'தியாகி', 'சங்கம்' போன்ற கதைகள் சான்று காட்டத்தக்கன. மனித மனங்களின் ஓட்டமும், பேச்சும், இரண்டாம் நிலையினதாய்க் கருதப்பட்டதால் பிரபஞ்சனின் கதைகளில் நனவோட்டம், உள்மனப்பேச்சு, மனப்போராட்டம் முதலிய உத்திகளுக்குச் சிறப்பிடம் தரப்படவில்லை. ஆயினும் இடம் பெறினும் படைப்பாளரின் இலக்கிய கொள்கைக்கேற்ப இலை மறைகாயாகத் தென்படுகின்றன.

'பிம்பம்' என்னும் கதையில் நானும் நானின் பிம்பமும் (Image) கதைமாந்தர்கள், நானும் பிம்பமும் உரையாடுகின்றன. யதார்த்தமான கதைகளின்று இது மாறுபட்டு நிற்பதற்கு காரணம் உளவியல் அணுகுமுறையே. பிரபஞ்சனின் சோதனை உத்தியில் பின்னப்பெற்றுள்ள கதைகளுள் இஃதும் ஒன்றாகும்.

முரண் (Contrast) எனும் ஓர் உத்தியினால் உருவாக்கப்பட்ட கதை 'ஒரு ஊரில் ரெண்டு மனிதர்கள்'. பழங்கதை உத்தி (Myth as techinque) யினால் படைக்கப் பெற்ற கதை 'ராஜ கோபுரமும் சங்கப்பலகையும்'.

புதுமைப் பித்தனின் 'பொன்னகரம்' கதையின் தொடக்க பாணியில் எழுதப்பெற்றதாகத் தோன்றும் தந்தையும் மகனும்', மாப்பசானின் 'தந்தையும் மகனும்' என்னும் கதையினை நினைவு கூர்வதாய்ப் பிரபஞ்சனது இக்கதையின் பெயரும், த. ஜெயகாந்தனின் 'கருணையினால் அல்ல' என்னும் கதையின் பாதிப்பினால் பெயர்பெற்றதாகப் பிரபஞ்சனின் 'கருணையினால்தான்' என்னும் கதையும், புதுமைப்பித்தனின் தலைப்பு உத்தியைப் (வேதாளம் சொன்ன கதை') பின் பற்றியதாய்க் 'கதாநாயகி குளித்த கதை'யும் ஆர். சூடாமணியின் 'அம்மா' வையும், நா. பா. வின் 'பூக்களை யாரும் மிதிக்கக் கூடாது' வையும் நினைவுபடுத்துவதாகப் படைப்பாளரின் 'அம்மாவும்' 'பூக்களை மிதிக்கக் கூடா'துவும் உள்ளன. மரபான உத்திக்குச் சான்றுகளாகவும் முன்னோரின் மொழியைப் பொன்னேபோற் போற்றுதல் என்னும் பண்பிற்கு ஏற்றசுவடுகளாகவும் மேற்போந்தனவும் பிறவும் விளங்குகின்றன. யதார்த்தவாதம், விமரிசன யதார்த்தவாதம் ஆகிய இரு கோட்டுக்குள் அடங்கிவிடுகின்ற படைப்புக்களே பிரபஞ்சனின் கதைகள், கிடந்த நிலையில் கிடந்தவாறு கதையைப் பின்னிச் செல்கின்ற பிரபஞ்சன் தன் ஆளுமையையும் பார்வையையும், வாசகர்கள் இனங்கண்டு கொள்ளுமாறு சற்று நகையைக் (Irony) கலந்து சிந்தனைக்குத் தூபமிடுகிறார். இவருடைய கலை நுட்பத்தில் சிறப்பித்துக்காட்ட வேண்டிய ஒரு பகுதி / கோணம் / கூறு இதுவாகும்.

> பிரபஞ்சன் எழுத்தில் பிரதானமாயுள்ள irony யைப் போல இத்தொகுப்பே (ஒரு ஊரில் ரெண்டு மனிதர்கள்) வாழ்க்கையின் irony யின் உருவகமாக எனக்குத் தோன்றுகிறது. இந்த irony இலக்கிய ரசங்களில் மிக உன்னதமானது. பிரபஞ்சனுடையது விரிந்த பார்வை, கூர்மையும் கூடியது. நுணுக்கமான விமரிசன ஆற்றல் கொண்டது. அதே நேரத்தில் அலட்சியமோ, கசப்போ, வெறுப்போ இல்லாதது. ('முன்னுரை', ஒரு ஊரில் ரெண்டு மனிதர்கள்)

என்கிறார் அசோகமித்திரன். 'பகை'யில் இவ்வுத்தியைக் (irony) காணலாம்.

கேசவன், மூர்த்தி, கிருஷ்ணமூர்த்தி, சுமதி ஆகிய பெயர்கள் திரும்பத் திரும்பக் கதைமாந்தர்களுக்கு இடம் பெற்றிருக்கின்றன. இஃதும் ஓர் உத்தியாகும். தமிழ்ச் சிறுகதை முன்னோடிகளுள் சிலர் அறிமுகப்படுத்திய இவ்வுத்தியினைத் தற்காலத்தில் சுஜாதா, மேலாண்மை பொன்னுச்சாமி, மா. அரங்கநாதன் போன்றோர் பின்பற்றியுள்ளனர். அவர்களுள் பிரபஞ்சனும் சேர்ந்து கொள்கிறார். மொத்தத்தில், பிரபஞ்சனின் கதைகள் உத்திகளுக்காகக் கதைகள் என்று இல்லாமல், கதைகளுக்காக உத்திகள் என்று கூறுமளவிற்கு உள்ளன.

மொழிநடை :

> பெரியார், ஈ. வே. ரா. வின் எழுத்து நடையே என்னைக் கவர்ந்த நடை. முதல் வாக்கியத்தில் சொல்ல வந்த விஷயத்தை ஆரம்பித்து விடுவார் பெரியார். அவரது எளிமையும், விஷயச் செறிவும் மிகவும் உயர்ந்தவை. பெரியாரின் உரைநடையே என்னை அதிகம் பாதித்த உரைநடை.

இவ்வாறு பிரபஞ்சன் தனது மொழிநடையைக் குறித்துக் கூறுகிறார். இதிலிருந்து அவர்தம் மொழிநடையின் அச்சு எங்கிருந்து சுழல்கிறது என்பதை அறியலாம். அல்லது பிரபஞ்சனின் மொழிநடையினுடைய தாக்கம் எப்படிப்பட்டது என்பதையாவது உணரலாம். படைப்பாசிரியரே கூறுவதுபோல் பிரபஞ்சனின் மொழிநடை எளிமையானது ; சின்னக் குழந்தையின் குறுநடை போன்றது ; அதன் சிறிய மலர்ந்த பார்வையை ஒத்தது ; மெல்லக் கிளர்ந்து பேசும் வனப்பைக் கொண்டது.

முத்து, உப்பளம் திடலுக்கு வந்து சேர்ந்தபோது கூட்டம் தொடங்கி நடந்து கொண்டிருந்தது. திடலின் வாசலிலேயே நின்றான் அவன். உள்ளே நுழைய முடியவில்லை. கூட்டத்தைப் பிளந்து கொண்டு செல்வது சாத்தியமல்லை. உட்கார்ந்திருந்தவர்களே லட்சக்கணக்கானவர்கள். நின்றவர்கள் தொகை அதற்கு நிகராய் இருந்தது. வெகு தூரத்தில் இருந்தது மேடை. அதில் அமர்ந்திருந்தவர்கள் வெறும் நிழல் உருவம்போல் தெரிந்தார்கள். பத்தடிக்கு ஒரு டியூப் லைட் போட்டு வெளிச்சத்தை வாரி இறைத்திருக்கிறார்கள். மனிதத் தலைகள் தொடக்கமும் முடிவுமின்றி வியாபித்திருந்தன. முண்டி, முண்டிக் கொஞ்சமாகக் கடந்து, நிற்பவர்களின் முதல் வரிசைக்கு வந்து நின்றான்.

(— 'கருப்பட்டி')

மேற்கண்ட பகுதி சிறிய - தெளிவான பொருள் கொண்ட தனித்தமிழ் அல்லாத சொற்றொடர் அமைப்புக் கொண்டதற்கு எடுத்துக் காட்டாகும். இவ்வமைப்பே பிரபஞ்சனின் மொழி நடை வடிவத்தின் சிறப்புத் தன்மையெனினும் ஒரோவழி நீண்டு வளர்ந்த சடைமுடிபோல் சொற்றொடர் அமைப்பு காணப்படுவதும் உண்டு.

கூட்டம் நெரிசல் இல்லாத ரயிலில் ஜன்னல் ஓரம் அமர்ந்து, காற்று முகத்தில் மோதி தலையைக் கலைக்கப் பயணம் செய்து, ரயில் நின்றதும் யாரும் தன்னைப்பின் இருந்து பிடித்துத் தள்ளாமல் பிளாட்பாரத்தில் இறங்கி நின்ற சுமதிக்கு, ஒரு குதூகலமே ஏற்பட்டது. (—' 3 நாள்')

இப்படி ஒருதொடர் ஒரு பத்தியாகும் அளவிற்குப் பரந்துள்ளது. சொற்றொடர் சிறியதாயினும் பெரியதாயினும் தமிழ் மொழிநூல் மரபின்படி எழுவாய், செய்ப்படு பொருள், பயனிலை என்னும் முக்கூறுகளை முறைப்படிக் கொண்டு அமைந்திருக்கிறது. விதிவிலக்காக அங்கொன்றும் இங்கொன்றுமாய் வேறு வகையான சொற்றொடர் அமைப்பும் காணப்படுகிறது

மனக்கண்ணால் பொருள்களைக்கண்டு ஒப்பிட்டு உவமை உருவங்களை இணைத்துப் படிப்பவன் மனநிலை உணர்வு நிலை கருத்து ஏற்புத்திறன் அறிந்து, வேறுபட்டனவற்றுள்ளும்

ஒற்றுமை கண்டு, புதுப்பொருள் உண்டாக்கி விடுகிறான்; புதுவது புனையும் இவ்வாற்றால் வெளிப்பாடே வண்ணனை என்கிறார். ஐ. ஏ. ரிச்சர்ட்ஸ் (Principles of Literary criticism, p. 188). இவ்வண்ணனையைப் பிரபஞ்சன் தன் படைப்புத் திறனுக்கும் கற்பனை ஆற்றலுக்கும் ஒரு படைக்கருவியாகக் கொண்டுள்ளார். சான்றாக, காதற்கிளிகளைப் (Lovebirds) பற்றிய வண்ணனையைக் காட்டலாம்.

> சிட்டுக்கள் மாதிரி உடம்பு. பச்சைக்கிளி மாதிரி மூக்கு. குடுகுடுப்பைக்காரன் சட்டை மாதிரி பல வண்ணங்களை ஒட்டுப் போட்ட உடம்பு. சின்னச் சின்ன உயிர்கள். ('சின்னஞ் சிறு வயதில்')

கலைஞன் தன் கற்பனைக்கு உருக்கொடுத்துப் பார்ப்பவர்க்கோ, படிப்பவர்க்கோ மனத்தில் பதியுமாறு தனது படைப்பு இலங்க முயல்கிறான். இலக்கியப் படைப்பாளி சொற்களைத் தேர்ந்து சொற்களை அடுக்கி, திரும்பத் திரும்பச் சொல்லையோ, சொற்களையோ, சொற்றொடர்களையோ பெய்து சொல்லவந்ததைப் படிப்பாரின் மனத்தடத்தில் ஒட்டவோ, பதியவோ வைக்கிறான். இத்தகைய பதிவுக் கலை (Impressionism) பிரபஞ்சனின் மொழி நடையில் பரக்கக் காணும்படியாகத் தோற்றமளிக்கிறது.

> குளித்தேன். அழுக்குத் தீர வேண்டுமெனக் குளித்தேன். எல்லா அழுக்கும். களைந்து போக வேண்டும் எனக் குளித்தேன். (—'ருசி')

இப்படைப்பாளரின் மொழிநடைக் கூறுகளுள் குறிப்பிடத்தக்கதாக அமைகிறது உவமை ஆட்சி. சிறிய நிகழ்ச்சியேயாயினும், ஒன்றைப் பற்றிச் சாதாரணமாகச் சொல்ல வேண்டிய நிலையாயினும் பிரபஞ்சன் உவமையின் வழியே உயிர்கொடுத்து உணர்வைத் தூண்டுகின்றார்.

1) அப்போது தான் பூத்த ஒரு பூமாதிரி, மழையில் நனைந்த சாலை ஓரத்து மரம் மாதிரி, ஓடைக் கூழாங்கல் மாதிரி, வெளிப்பட்டாள் மரி. (-'மரி என்கிற ஆட்டுக்குட்டி)

2.) கைக்கு அடங்காத அந்த கொத்து மீசை, எலி வால் போல் சிலுத்திருந்தது. ரங்கூன் தேக்கு மாதிரி பளபளத்த அவர் மார்பும், கடைசல் பண்ணியது

மாதிரியான கரணை கரணையான கைகளும், தோளும் எங்கே போயின? தீ எரித்த வீடு மாதிரி கரி படர்ந்து போயிருந்தது அவர் முகம். வீடு சரியுமுன்னே அவர் சரிந்து விட்டிருந்தார்.

(—'நேற்று மனிதர்கள்')

8) கலா சிரித்துக் கொண்டுதான் சொன்னாள். கசந்து கொண்ட சிரிப்பு. மெல்லிய சல்லாத் துணியைப்போல வருத்தம் அவள் முகத்தில் கவிந்தது. முதல் இடத்தைக் குறி வைத்து மூன்றாம் இடத்தில் வந்து நின்ற ஓட்டப் பந்தயக் காரனின் ஏக்கம் அது. மூர்த்தி அவசரமாகப் பேச்சை மாற்றினான்.

(—'காயம்பட்ட மாலை வானம்')

இவை பிரபஞ்சனின் உவமைகளுக்கு எடுத்துக்காட்டுக்கள். குறிப்பாகக் கூறினால், உவமை இல்லாமல் கதைகள் இல்லை.

இறுதியாகக் கதை மாந்தர்களினது உரையாடலும் கதை மாந்தரின் கதைக் கூற்றும் அவரவர் தரத்திற்கும் தகுதிக்கும் ஏற்றாற்போல் உள்ளன, பிரபஞ்சனின் தமிழ்ப் புலமை தீப்பொறி போல் தெறித்தாலும் கதையாசிரியரின் உரிமையும் கதை மாந்தர்களின் சுதந்திரமும் காப்பாற்றப்படும் விதத்திலேயே மொழிநடை விளங்குகிறது.

நான் சொல்வது சத்தியம். செண்பகா கும்பிட்டு நின்றதுபோல, ஒரு நிலையை நான் கோவில்களில் சிற்பமாகப் பார்த்திருக்கிறேன். அ" றைக்கு காலை யில் பூத்த புஷ்பம் மனசுக்குள் தோன்றியது ஒரு வைகறைப் பொழுதில், இலை நுனியில் ஒட்டிக் கொண்டிருக்கிற பனித்துளியை நினைவுபடுத்தினாள் செண்பகா. ஏனோ தெரியவில்லை. எனக்கு என் அம்மா முகம் நெஞ்சில் நிழலாடியது.

(—'ஆண்பிள்ளை')

இங்குக் கதை சொல்லி 'நான்'. நானின் இயல்பு வெளிப் படுவதைப் பார்க்கலாம். இன்னொரு கதையில் நானுக்கும் மகாபாரத ஐவருக்கும் இடையே உரையாடல் தொடர்கிறது. அதில் ஒரு பகுதி வருமாறு:

நான் சொன்னேன்

'பதவிக்காகப் பிள்ளைகளை பலி கொடுக்கிறத சொல்றீங்க... ஸ்வாமி... பிள்ளைக்காக மத்த மனுஷாள பலி வாங்கறவாள்ளாம் இப்போபதவிக்கு வந்திருக்கிறத பார்த்தேளா ?'

'ரெண்டும் ஒரே அச்சுதான், பக்கந்தான் வேறே ... இவாள்ளாம் மனுஷாள் விட்டுத் தள்ளுங்கோ... தெய்வங்கள் என்ன வாழ்ந்ததுங்கறேன் ... பிள்ளைக் கறிக்கு ஆசைப்படறது ஒன்னு ... சை ...'

'நமக்கு பொம்பிளைக் கறிமேலே ஆசை ; தெய்வத்துக்கு மனுஷன் கறிமேல ஆசை ... இது ரெண்டும் ஒரே அச்சுத்தான் ... இல்லியா ...

'ஒய் ...ஒய் ... என்ன என்ன சொல்லிட்டேள்...?'

(—'பலி')

முடிவுரையாக

இருபதின் அறுபதுகளில் தமிழ்ச்சிறுகதை இலக்கிய உலகில் அறிமுகமானோருள் ஆற்றலாலும் தரந்தாலும் முன்ன வரிசை-யில் அணி செய்துகொண்டு பணிபுரிந்து வருகிற புலவர் பட்டம் பெற்ற இளைஞர் - எழுதுக்கலைஞர் பிரபஞ்சன் - அவரே, கூறிக்-கொள்வதுபோல் 'கொஞ்சமாக எழுதும் ஜாதியைச் சேர்ந்தவரான பிரபஞ்சனின் சிறுகதைகள் எண்ணிக்கையில் குறைவானவை ஆயினும், தமிழ்ச் சிறுகதை வரலாற்றில் சாதனை செய்தோரின் பட்டியலில் பட்டயம் தீட்டிகொண்ட பெருமை இவருடைய-தாகும். இலக்கியச் சோதனைகளைப் பொறுத்தமட்டில் படைப்-பாளரின் கவனம் மேலும் கூர்மை அடைய வேண்டி இருக்கிறது.

படிக்க அலுப்புத் தட்டாத - சற்றுப் பெரிதான - அளவான ஓட்டத்தில் இயங்குகிற - சமுதாய நிகழ்வுகளைச் சுட்டுகிற-அனு-தாபத்துடனும் அக்கறையோடும் பார்க்கச்செய்கிற - பகுத்தறிவுச் சிந்தனையைத் தூண்டுகிற - காலத்திற்க்கேற்ற கருத்துக்களைக் கூறுகிற எளிமையான யதார்த்தமானபடைப்புக்கள் பிரபஞ்சனின் சிறுகதைகள், இம் மதிப்பீட்டுடன்.

'படிக்கச் சுவாரஸ்யமும், படித்தபின் மனம் அசைபோடத்தக்க விஷய கனமும் என் கதைகளின் பலங்கள்'

என்கிற படைப்பாளரின் தன்மதிப்பீட்டையும் சேர்த்துக் கொள்ளலாம்.

பிரபஞ்சனின் சிறுகதை நூல்கள்

1) ஒரு ஊரில் ரெண்டு மனிதர்கள் — நர்மதா பதிப்பகம், சென்னை. 1982. மு. ப.

2) பிரபஞ்சன் கதைகள் — அன்னம், சிவகங்கை, 1986, மு ப.

3) நேற்று மனிதர்கள் — தமிழ்ப் புத்தகாலயம், சென்னை. 1986 மு. ப.

4) விட்டு விடுதலையாகி — மீரா வெளியீடு, புதுக்கோட்டை, 1988, மு. ப.

இசை ஒலியெலாம் ....
" Noise Pollution "

பேராசிரியர், வி. அ. இளவழகன்,
எம். எஃசி., எம். ஃபில்.,
வேதியியல் துறை,
அ. வீ. வா. நி. திரு புட்பம் கல்லூரி, பூண்டி.

இடம் : பேருந்து நிலையம், நகரப் பேருந்து புறப்பட ஆயத்த நிலையில் உள்ளது. பயணிகள் நிரம்பி வழிகின்றனர்.

Sound effect: 1. Bus Engine 2. Air and Bulb horn 3. Tape Recorder play 4. இஞ்சி முரபா, சோளப்பொரி, முறுக்கு விற்பனையாளர் அலறல் 5. குழந்தைகள் கத்தல் 6. பயணிகள் பேச்சு

1 வது பயணி : ஏங்க ! உங்களைத்தான்! இந்த டவுனு வண்டி எங்கே போவுது ? ... ...

2 வது பயணி : ம் ம் ... ... வளைஞ்சு, நெளிஞ்சு, நேரா, கோணலா ... ... ஊரெல்லாம் சுத்திக்கிட்டு போவுது ! ... நீ எங்கய்யா போவணும்? அதைச் சொல்லுவியா ? ... ...

1 வது பயணி : அது சரி ... நீங்க எல்லாரும் போற ஊரைச் சொல்லிப்புட்டுத்தான் வண்டியிலே ஏறிக்கிட்டீங்களா? ... க்கும்... நான் திருவையாறு போகணும் ...

கல்லூரிமாணவர் : (ஓட்டுநரை நோக்கி — கிண்டலாக) ... ஏங்க ஓட்டுநரே ! அந்த சத்தப் பொட்டியோட (Tape Recorder) குரலை ஏன் அமுக்கி வச்சுப்புட்டீங்க ? ... கொஞ்சம் தட்டி விடறது ... உஸ் ... ஸ் ... அப்பாடா ஒரே நெரிசல் ... காட்டுக்கூச்சல் தலையைச்சுத்துது ... ... பாட்டைக் கேட்டுக்கிட்டாவது ... நிக்கலாமே ! ...

ஓட்டுநர்: உங்களைப்போல கல்லூரி மாணவர்கள் எல்லாம் இந்த நாட்டின் முடி சூடா மன்னர்கள். வாயைத் திறந்து கேட்டுட்டீங்க. உங்களுக்கு இல்லாத பாட்டா? இதோ தட்டி விட்றேன் ... கேளுங்க ! ... ...

ஒலிப்பதிவு நாடா அலறல் : " எத்தனை காலந்தான் ஏமாற்றுவாய் இந்த நாட்டிலே! ... இந்த நாட்டிலே! ... இந்த நாட்டிலே ! ... " இந்த நாட்டிலே " என அதே வரியை, திரும்பத் திரும்ப அலற)

கல்லூரி மாணவன் : (கிண்டலாக)

மாலன் : அட...ட...டா... என்ன அருமையான பாட்டு!... கேட்டியா செந்தில்... நேத்துதான் வெளிவந்திருக்கு இந்த பாட்டு... ரொம்ப, ரொம்ப புதுசு!...

வயதான பாட்டி : ஏண்டப்பா! காலை வேளையும் அதுவுமா...... வெங்கடேஸ்வர சுப்ரபாதம் போடப்படாதோ... இதெல்லாம் என்ன பாட்டோ? தத்து பித்துன்னு..... ஆண்டவனுக்கே வெளிச்சம் போங்கோ...... பாட்டாம்...... பாட்டு!......

சங்கீத சுவைஞர் : காலம், வர வர ரொம்ப மோசமா போயிண்டே வர்றது. இவாளை சினிமா மோகம் ஏன்தா இப்படி ஆட்டுதோன்னு நேக்குப் புரியல்லே!......

2வது சங்கீத சுவைஞர் : ஆமாமா... நீங்க சொல்றது ரொம்ப சரி! மன்மத லீலையை வென்றார் உண்டோ"—ன்னு தியாகராஜ பாகவதர் பாட்டு; நீங்க கேட்டதுண்டோ?...... அந்தப் பாட்டைப் போடக்கூடாதா?...... பாட்டு—ன்னா... அதுதான் பாட்டு!

1வது விற்பனையாளர் : (கட்டைக்குரலில்) இஞ்சி முர்ரபா... இஞ்சி முர்ரபா ... தண்ணி தாகத்துக்கு, தலை சுத்தலுக்கு...... இஞ்சி மிட்டாய்... வாந்திக்கு வயித்துப் பொறுமலுக்கு இஞ்சி முர்ரபாய்... வால்மிளகு, வல்லாரை, ஓமம், சித்தரத்தை, இஞ்சி சேர்த்த இஞ்சி முர்ரபாய்!......

பயணி : ஏம்ப்பா! இஞ்சி முர்ரபா! உன்னோட இஞ்சி முட்டாயை வாங்கி சாப்பிட்டா பித்தம், மயக்கம், தலைசுத்தல், தண்ணிதாகம் வாந்தி...... இதெல்லாம்...... போயிடுமா? இல்லே...... வந்திடுமா?

1வது விற்பனையாளர் : ம்...... 50 பைசாவுக்கு வாங்கி சாப்பிட்டு பாரு! அப்புறமா தெரியும்... வருதா போவுதான்னு... ஏன்யா... நீங்கல்லாம் மனுசன்னு வெளியே கிளம்பி வர்றீங்க!... ஆளைப்பாரு? ஆளை! சேத்திலே புடிச்ச உளுவை மீன் மாதிரி!......

2வது விற்பனையாளர் : (கரகரப்பான குரலில்) கண்டி முறுக்கு! ரூபாய்க்கு 20; கண்டி முறுக்கோய்! ......

(தொடரும்)

இரா. சுந்தரமூர்த்தி, எம். ஏ., எம்ஃபில்.
முதுநிலை விரிவுரையாளர்,
த. உ. க. கலைக்கல்லூரி,
தஞ்சாவூர் - 2.

முனிவர் செருக்கடக்கியது :

சிவபெருமான் தாருக வனத்திற்குப் பிச்சாடனர் வடிவமாய்ச் சென்றார் என்பதை,

" இடுமைய மேற்கவொண் கபாலங் கையில்
ஏந்திமகா லிங்கர் வந்தார் "71

" வத்திர மரையிலார் மெய்யில்
தையலார் பலிச்சென்றுழன்று "72

தாருக வனத்து முனிவர்கள் சிவபெருமானைச் செருக்குடன் எதிர்த்து நின்றனர். வேள்வியியற்றினர். வேள்வியில் தோன்றிய மானை, இறைவனை நோக்கிப் போகச்செய்தனர். சிவபெருமான் அம்மானைத் தன் கையகத்துக்கொண்டார். இச்செய்தியை,

" இசைநேர்ந்தவ முனிவோர்விடு
மிகன்மானதொர் கரமேல்
வசமாகிட வுளமேசெயு மருதீச "73

" மானுக்கிடத்தரும் "74

எனும் பகுதிகளால் அறியலாம்.

தாருக வன முனிவரின் செருக்கையடக்கிய திருமாலாகிய மோகினியுடன் கலவி கொண்டதனைக்

" கவினனு மரியவி நோதஞ்செய் மோகினி
கலவியின் வகைகொள வாவிப் புணர்ந்தன "75

என்பது குறிக்கின்றது; ஆதிசக்தியின் புருடசத்தியே திருமால் என்பதை இப்பகுதி குறிப்பால் உணர்த்துகின்றது.

திருமால் :

ஆக்களைக் காத்தருளிய செயலால் சீதரனைக் கோபாலன் என்று உலகத்தோர் கூறுவார்கள் என்பதைக்,

" கோபால னஞ்செய்த கொள்கையாற் சீதரனைக்
கோபால னென் றுலகர் கூறுவரால் "76

என இப்பாடலடிகள் விளக்குகின்றன; ஆன்மாக்களைப் பசு எனக்கூறும் முறை உண்டாதலின் இறைவனே அப்பசுக்களின் தலைவன் என்னும் குறிப்பு இதனால் பெறப்படுகிறது.

உலக அண்டத்தை உண்ட திருமாலை,
" அண்ட முண்ட விண்டு "[77]

என்கின்றார். மாயோனின் இச்செயல் அவனது வரம்பிலா ஆற்றலுக்கோர் சான்றாம்.

முருகன் :

முருகவேள் திருமணச்செய்தியை
" இச்சை மேவ மருத வாண ரிளையபிள்ளை முருகவேட்
கின்ப மெய்து மெங்கு லப்பெணேற்று மணமு முற்றதால்
அச்சு தன்வி ரிஞ்ச னாதி யமரர் பந்து வாயினார் "[78]

என்கிறார். இப்பகுதியில் திருமால், நான்முகன், அமரர்கள் முதலானோர் உறவினரானவார்கள் என்று சமய ஒற்றுமையை நுணுக்கமாகக் குறிப்பிடுவதை அறியலாம்.

முருகன் சூரபதுமனை வீழ்த்திய செய்தியை "சூரைச் சினக்கும் வேல் "[79] என்று கோடிட்டுக் காட்டுகிறார். முருகனது அவதார நோக்கத்தை இது சுட்டுவதாக அமைந்துள்ளது.

இந்திரன் :

இந்திரனைச்
" சீருறுநாற் கோட்டுத் திறலத்தி யூரரசும்
தீரமுற மாகஞ் செழித்துயவே "[80]

என்று குறிப்பிடுகின்றார். தேவர் தலைவனுக்கருள் செய்த இச்செயல் சிவபெருமான் தேவதேவன் என்னும் பெருமையை நிலைநாட்டுவதாயிற்று.

முனிவர்களைப் பற்றிய புராணச்செய்திகள் :

1. அகத்தியமுனிவர் :

அகத்திய முனிவரைக்
" குடமுனி "[81]

" தாங்குநெடுங் கடலுண்ட முனிபரவு
மிடைமருதூர்த் தலத்தை "[82]

" ... நற்பொதிய
அகத்திய ரேத்து மருதீசர் "[83]

" மலய முனிக்கா வமரு மருத வனன்றன் வெற்பின் "[84]

என்று நூலாசிரியர் இயம்புகின்றார் ; அகத்தியர் தோன்றிய வரலாறும் கடலுண்ட அவரது ஆற்றலும் பொதிய மலையில்

தங்கித் தவம் செய்த பெருமையும் இப்பகுதிகளால் உணர்த்தப் படுகின்றன.

2. பதஞ்சலி முனிவர் : (புயங்க முனிவர்)

> "திருமாலின் படுக்கையாகிய ஆதிசேஷன், பெருமான் அருளியபடி பதஞ்சலி முனிவரானார். நாகலோகஞ் சென்றார். ஞானமயமாகிய மலையை வணங்கி, அதன் பக்கலில் உள்ள பிலத்துவாரம் வழியாகத் தில்லையை அடைந்தார். வியாக்கிரபாதரோடு நட்புக்கொண்டு திருமூலட்டானரை வணங்கினார். தில்லை வனத்தின் மேல்பால் நாககேசரி என்ற தீர்த்தத்தை உண்டாக்கினார். அதன் கூரையில் சிவலிங்கத்தைத் தாபித்து வழிபட்டார்[85]

3. வியாக்கிரபாத முனிவர் : (புலிக்கால் முனிவர்)

தில்லைத் திருமூலட்டானரைத் தரிசித்தார். அதற்குமேல் பால் ஒரு சிவலிங்கம் தாபித்து வழிபட்டிருந்தார். வண்டுகள்

> "தேனைக்குடிப்பதற்கு முன் பூக்களை எடுத்துப் பூசிக்க வேண்டும் என்கிற எண்ணம் இவருக்கு உண்டாயிற்று. அதைப்பெருமானிடம் விண்ணப் பித்தார். பனிக்காலத்திலுங் கூட மரங்களில் வழுக்காமல் பிடித்துக்கொண்டு ஏறுவதற்குப் புலிக் கால் புலிக்கைகளையும் வைகறையில் வழியைப் பார்த்துச் செல்லுதற்கும் பூக்களைப் பழுதின்றி எடுப்பதற்குமாகக் கால் கை நகங்களில் கண்களையும் பெற்றார். அதனால் வியாக்கிரபாதர் (புலிக்கால் முனி) எனப்பெயர் பெற்றார்."[86]

பதஞ்சலி புலிக்கால் முனிவர்களைப்,

"புயங்கமுனி ஞானப்புலிக்கான் முனியொண்
புயங்கமணி நாதவெனப் போற்ற"[87]

என்று நூலாசிரியர் பகர்கின்றார்.

4. உபமன்னியு முனிவர்:

பால் விழைந்த பாலகனான உபமன்னியனுக்கு இறைவன் பாற்கடல் ஈந்ததனைச்

"சேல்விழைந்த கண்ணாளொண்
செல்வமுறு திருத்தாயின்
பால்விழைந்த பாலகற்குப்
பாற்கடல்பா லித்தனையே"[88]

" ...... ஞானக்கண்
பெற்றபுலிக் குட்டிக்கு பேரமுத வாரியளித்
துற்றமரு தீ சனையு ளோது "[89]

என்று நூலாசிரியர் குறிப்பிடுகின்றார்.

இப்புராணத்தில் வரும்,

" உபமன்னியர், வசிட்டரிடம் காமதேனுவின் பால் உண்ட ருசியில் அழ, முனிவர் (வியாக்கிரபாத முனிவர்) குழந்தையைச் சிவமூர்த்தி சந்நிதானத்து இட்டுக்குறை கூறினர். சிவமூர்த்தி குழந்தைக்குத் திருப்பாற்கடலை உண்பித்தனர் "[90]

பட்டினத்தடிகள் : (வெண்காடர்)

" பட்டினத்தடிகள் உச்சயினி நாட்டில் உள்ள காட்டில் பிள்ளையார் கோயிலில் நிட்டைகூடி யிருந்தார். அந்தச்சமயம் அரண்மனையில் கொள்ளையடித்துச்சென்ற கள்ளர்கள் பொருள் கிட்டியவுடன் முத்தாரம் சாத்துவதாக, விநாயக ரிடம் வேண்டிக்கொண்டனர். கொள்யைடித்த பின் முத்து மாலையை விநாயகர்மேல் எறிந்தனர். அம்மாலை பட்டினத்தார் கழுத்தில் விழுந்தது. அவ்விடம் வந்த காவலர்கள் பட்டினத்தாரை அரசனிடம் (பத்திரகிரியார்) பற்றிச் சென்றனர். அரசன் அவரைக் கழுவிலேற்றுமாறு ஆணை யிட்டனன். இறையருளால் கழுமரம் எரிந்தது. அரசன் அடிமையானான் "[91]

பட்டினத்தடிகள் பற்றிய இப்புராணச்செய்தியை,

" இயலாதி முத்தமிழ்தேர்ந் தேத்துவெண்கா டாக்கர்ச்
செயிரார் கழுவெரியச் செய்தாய் "[92]

என்று நூலாசிரியர் பெருமையுறப் புகழ்கின்றார். பட்டினத்தடி களின் செந்தமிழ்ப் புலமை இப்பகுதியில் சுட்டப்படுகின்றது.

பிற புராணச் செய்திகள் :

வேயுதித்த முத்து :

திருநெல்வேலியில் மூங்கிலடியில் சிவனார் காட்சி நல்கி யருளியதை, " வேயுதித்த முத்து "[93] என்று குறிப்பிடுகின்றார்.

பாசுபதம் :

சிவபெருமான் அருச்சுனனுக்குப் பாசுபதம் கொடுத்தருளியதை,

"அருச்சுனற்குப் பாசுபத மளித்தாண்ட சங்கரனே"[94]
என்பர். பாசுபதம் (சிவாஸ்திரம்) அளித்த நிகழ்ச்சியை,

> "ஒரு கொடிய கொம்புள்ள பன்றியை வேகமாகத் துரத்திச் சென்றார் (சிவனார்). தாம் இன்னரென்று விஜயன் நாடாத வகையில் அவனோடு உள்ளன்புடன் போர் புரிந்தார். அவன் தோள்மீது பல கூரிய அம்புகளைப் பாய்ச்சினார். அவன் தவத்தை அழித்தார். ஈற்றில் அவனுக்குப் பாசுபதம் என்னும் சிறந்த படையையும் ஆவநாழி (அம்பறாத்தூணி) யையும் தந்து அருள் பாலித்தார்."[95]

எலிக்கு அரசாட்சி :

சிவனார் எலிக்கு அரசாட்சி நல்கியருளிய செயலைத்

> "திருவிளக்கிலுள்ள வெண்ணெயையுண்ணும்படி எண்ணி விளக்கை நெருங்கி, கெடாத அந்த விளக்கினைத் தூண்டி எரியச் செய்த தாவுகின்ற அற்பமாகிய எலிக்கு அரசாட்சி செய்ய மூன்று உலகத்தையும் விரைவாக அருளிச் செய்த வளந் தங்கிய திருக்கரத்தை உடையவனே".[96]

என்று கோயில் நான்மணிமாலைப் பாடலின் புராணக் குறிப்பு விளக்குகிறது.

இப்புராணச் செய்தியைத்

"தடையற வெலியொரு தனியர சுறவருள்
கொடையினி விசைபெறு குணமுள மகிமையை"[97]

என்று போற்றுகின்றார். இப்புராணச் செய்தியால் சிறிய உதவி செய்வாருங்கூட இறைவன் அருளால் அரிய மேனிலையைப் பெறுவர் என்பதை உணரலாம்.

இவ்வாறு நூலாசிரியர் புராணக்கருத்துக்களைப் பயில்வாரின் உள்ளக் கருத்துக்கேற்பக் குறிப்பிடுகின்றார். புலவர் காலத்தின் சூழலுக்கேற்பப் புராணக் கூற்றுச் செய்திகளைக் கையாண்டுள்ளார். மக்களின் மன ஒருமைப்பாட்டுக்குப் புராணக் கருத்துக்களைச் சமயப்புலவர்கள் எடுத்துக்காட்டியுள்ளனர். சுவைமிக்க கதைகளைப் போலவே அறம் மலிந்த புராணங்களும் உள்ளத்திற்கு மகிழ்வைத் தருகின்றன. இப்பணியாற்றிய சமயப் புலவர் வரிசையில் இராமசாமிச்செட்டியார் சிறந்து விளங்குகின்றார்.

அடிக்குறிப்புகள்

71. மேற்படி ., பா. 84.
72. மேற்படி ., பா. 96.
73. மேற்படி ., பா. 6
74. மேற்படி ., பா. 18.
75. மேற்படி ., பா 4.
76. மேற்படி ., பா. 10.
77. மேற்படி ., பா. 1.
78. மேற்படி ., பா. 9.
79. மேற்படி ., பா. 2.
80. மேற்படி ., பா. 2.
81. மேற்மடி ., பா. 1.
82. மேற்படி ., பா. 22.
83. மேற்படி ., பா. 77.
84 மேற்படி ., பா. 35.
85 பொன். சுப்பிரமணியபிள்ளை 'முகவுரை' கோயிற் புராணம் (உரைநடை) ப. 7.
86. மேற்படி. ப. 6.
87. திரு. ம. கலம்., கா. 5.
88. மேற்படி., பா. 1.
89. மேற்படி., பா. 18
90 ஆ. சிங்காரவடிவேலு முதலியார், அபிதான சிந்தாமணி, பக். 1446 – 1447
91. பொன். சுப்பிரமணியபிள்ளை, மருதவனம் என்னும் திருவிடைமருதூர், பக். 20 - 21.
92. திரு. ம. கலம்., பா. 16.
93. மேற்படி., பா. 16,
94 மேற்படி , பா. 91.
95. வ. சு. செங்கல்வராயபிள்ளை, தேவார ஒளிநெறிக் கட்டுரை (சுந்தரர்) பக். 253 2›4
96 பொன் சுப்பிரமணிபிள்ளை (உ.ஆ.), பட்டினத்துப் பிள்ளையாரின் கோயில் நான் மணி மாலை, பா.40; (அடி : 31-34-இன தெளிவுரை)
97. திரு. ம. கலம்., பா. 1.

வேண்டுகோள்

இலக்கியம் இலக்கணம் சமயம் தத்துவம் வரலாறு கல்வெட்டு கலைபற்றிய ஆய்வுக்கட்டுரைகள் வேண்டப்பெறும். கட்டுரைகள் 4-6 பக்க அளவில் அமைதல் நலம். நெடிதாயின் வகைப்படுத்தித் தருதல் வேண்டும். ஒரு பக்கத்தில் தட்டச்சு அல்லது தெளிவான கையெழுத்தில் அமைதல் வேண்டும். ஆசிரியர் குழு தேர்ந்தளிக்குங் கட்டுரைகளே வெளியிடப்பெறும். இன்றியமையாத அடிக்குறிப்புக்களே சேர்க்கப்படும். தேரப்பெறாத கட்டுரைகள் திருப்பியனுப்பப் பெறா ஆதலின் கட்டுரைகளைப் படியெடுத்துக் கொண்டு அனுப்பி வைக்க வேண்டுகிறோம்.

தமிழ்ப் பொழில் ஆசிரியர் குழு

கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீடுகள்

யாழ்நூல் — ஆசிரியர் விபுலானந்த அடிகள்	ரூ. 50 00
கட்டுரைப் பொழில் தமிழ்ச்சங்க மணிவிழா மலர்	ரூ. 30 00
கட்டுரைப் பூங்கா (தமிழவேள் த. வே. உமாமகேசுவரனார் நூற்றாண்டு நினைவு வெளியீடு)	ரூ. 6 00
இராசராச சோழன் முடிசூடிய 1000 ஆவது ஆண்டுவிழா நினைவு சிறப்பிதழ்	ரூ. 6 00
கபிலர்—நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார்	ரூ. 4 00
நக்கீரர்—நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார்	ரூ. 3 00
மெய்ஞ்ஞானத்தின் கொலுவிருக்கையில் அஞ்ஞானத்தின் வழக்கீடு பா. வே. மாணிக்க நாயக்கர்	ரூ. 2 00
கவியரசு நினைவு மலர்	ரூ. 1 00
தமிழரசி குறவஞ்சி	ரூ. 0 75

பிற வெளியீடுகள்

தொல்காப்பியம் ஆராய்ச்சிக் காண்டிகையுரை

எழுத்ததிகாரம்	ரூ. 40 00
சொல்லதிகாரம்	ரூ 45 00
கரந்தைக் கோவை [ச. பாலசுந்தரம்]	ரூ. 7 50
கலைக் கூத்தன் கவிதைகள்	ரூ. 4 50

விற்பனைக் கழிவு 20% உண்டு. அஞ்சற் செலவு தனி

தலைவர்
கரந்தைத் தமிழ்ச் சங்கம்
தஞ்சாவூர் - 613 002.

Regd. No. TN/TJ/24

நூல் - அஞ்சல்

பெறுநர்

திருமிகு நூலகர்,

அரசினர் கீழ்த்திசைச்

சுவடிகள் நூலக

சென்னை

600005

அவர்கள்

ஆசிரியர்,
தமிழ்ப்பொழில்
கரந்தைத் தமிழ்ச் சங்கம்,
தஞ்சாவூர் - 613 002.

தமிழ்ப் பொழில் கட்டணம்

		உள்நாடு	வெளிநாடு
தனியிதழ்	ரூ.	2 50	3 00
ஆண்டுக் கட்டணம்	ரூ.	30 00	60 00
வாழ் நாள் கட்டணம்	ரூ.	250 00	600 00

வெளியிடுவோர் : திரு. ச. இராமநாதன், தலைவர், கரந்தைத் தமிழ்ச் சங்கம்.,
கருந்திட்டைக்குடி, தஞ்சாவூர் - 613 002.

அச்சிடுபவர் : திரு. M. சந்திரமௌலி,
ஜெமினி அச்சகம், 1837 / 1, மேலராஜ வீதி,
தஞ்சாவூர் - 613 009.